SOUTHALL SHUTTERS
(NATIONWIDE)
Shop Front - Roller Shutter - Glass
*Shop Shutters * Remote Control Garage Shutters
*Van Shutters *Door Closers *Industrial Shutters
SALES - SERVICE - REPAIR
LEICHESTER - LONDON - BIRMINGHAM
Tel. Head Office: 020 8843 2235

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

Asian Funeral Care Ltd.
Funeral Services
Welcome: International Transportation and DSS Claims
Tel: 020 8909 3030 (24 Hours)
(Sanjay L. Lodhia)
35 Kenton Park Parade, Kenton Road, Kenton Harrow, Middx. HA3 8DN (Next to Barclays Bank)

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN-32 June - July 2003
For News & Advertising: 020 8952 5677
16 பக்கங்கள்

# 27,000 தமிழர்களின் தஞ்சம் நிராகரிப்பு!

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி பாதுகாப்பு நாடுகள் என்ற பட்டியலை பிரித்தானிய அரசு அறிவித்தது. அதன் படி பாதுகாப்பான நாடுகளில் இருந்து தஞ்சம் கேட்பவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் மேன்முறையீடு செய்யும் உரிமையை இழக்கின்றனர்.

பிரித்தானியாவில் 27,000 தமிழர்கள் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இலங்கை அடக்கப்படுவதன் மூலம் விரைவுத் தீர்மானம் என்ற செயற்பாட்டிற்குள் தமிழ் தஞ்ச விண்ணப்பங்கள் செலுத்தப்பட்டு விரைவில் முடிவுகள் எடுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

## இலங்கை பாதுகாப்பான நாடு பிரித்தானிய உள்துறை அமைச்சின் முடிவு

அகதித் தஞ்சம் கோருவோரர் எண்ணிக்கையைக் கட்டுப்ப்டுத்த மேலும் ஏழு நாடுகளை பாதுகாப்பான நாடுகள் என பிரித்தானிய அரசு யூன் 17ல் அறிவித்து உள்ளது. பேச்சு வார்த்தையில் இழுபறி நிலவி வரும் நிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நாற்பதுக்கும் மேற்பட்ட அரசியல் படுகொலைகள் இடம்பெற்றுள்ள நிலையில், இனவன்முறைகள் கிழக்குமாகாணத்தில் இடம்பெற்று வரும் நிலையில் பிரித்தானிய உள்துறை அமைச்சு இலங்கையை பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் சேர்த்து உள்ளது. ஏற்கனவே பேச்சு வார்ததையைக் காரணம் காட்டி தஞ்சம் கோரிய தமிழர்களைத் திருப்பி அனுப்பி வரும் நிலையில் உள்துறை அமைச்சின் இந்த முடிவு தஞ்சம் கோரிய ஆயிரக்கணக்கான தமிழர்களை பாதிக்க உள்ளது.

இதற்காகவே வடிவமைக்கப்பட்ட ஓர்கிங்ரன் வரவேற்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விரைவாக விண்ணப்பங்கள் பரசீலிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும். நிராகரிக்கப்டும் போது விண்ணப்பதாரி மேன் முறையீடு செய்ய அனுமதிக்கப்படமாட்டார். பிரித்தானியாவில் தமிழ் தஞ்ச விண்ணப்பதாரிகள் சந்திக்கின்ற மிகக் கடுமையான சட்ட நெருக்குதலாக இது அமைந்து உள்ளது.

பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் இதுவரை 24 நாடுகள் அடக்கப்பட்டு உள்ளது. அகதித் தஞ்சம் அதிகம் துஸ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்க இவ்வாறு நாடுகள் பட்டியல்படுத்தப்படுவதாக உள்துறை அலுவலக அமைச்சர் பெவர்லி கியூச் தெரிவித்து உள்ளார்.

World Wide Flights
TTAL
from
Chennai £475 Calcutta £475
Bangkok £385 Dubai £259
Colombo £425 Delhi £485
Colombo to Jaffna R/T £40
SriLankan
Other destinations available plus taxes
March offer 12 days at a Standard hotel in Colombo.
Includes B&B airport transfer for £549 pp sharing
Call 0800 093 1411
Email: info@ttal.co.uk
IATA

The International
Wood Floor Centre
Laminate Flooring available in 6 colours
£5.95 per sq.m + VAT only or Fully Fitted £24.95 + VAT
Engineered Floors £14.99 + VAT only
Solid Oak Floor £23.50 + VAT only
Free Estimates, Site Surveyor & Free Delivery
Tel: 020 8951 4395 - 4495
Open 7 Days Fax: 020 951 4251
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH
www.internationalwoodfloor.co.uk

A40 Wholesale Ltd.
Specialists in Wines, Beer, Spirits and Softdrinks
* FREE Delivery
* Special Instore Prices
* Credit Cards Accepted
* Open 7 Days
Unit 4, 427 Long Drive, Greenford, Middx. UB6 8UH (Behind B&Q)
Tel: 020 8578 5500
Fax: 020 8578 8889

Starline©
தமிழில் பேசி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய
Great Deals on:
* Connections
* Upgrades
* Pay As You Go
* Phone Accessory
* Car kit fittings
* Repairs
T-Mobile
Free Phone: 0500 120 121
Open: 10am - 7pm Mon - Sat & 12 - 6pm Sun
235 The Broadway Southall UB1 1ND

BIRDY & CO
Solicitors
Legal Aid + Private
Immigration
Criminal
Landlord & Tenant
Matrimonial
Personal Injury
Civil Litigation
Conveyancing
Tel: 020 8900 9112
Emergency: 07802 436120
606B High Road
Wembley, Middx. HA0 2AF

Park Royal Cash & Carry
We are specialists in WINES, BEER, SPIRITS & SOFT DRINKS
Opening Offers: Very special DISCOUNTS for our New & Old Customers
* All Credit Cards accepted
* Free Delivery
* Open 7 Days
Call us on Tel: 020 8838 2233
Fax: 020 8838 0555
29/31, Minerva Road, Park Royal, London NW10 6HJ

Tyres • Exhaust • S. Absorbers • Brakes • Services
THE ALIGNMENT CENTRE
Specialist in
Advanced Four Wheel Alignment
FREE Wheel Alignment Check
10% OFF
Unit 7
Sheraton Business Centre
Wadsworth Close
Off Wadsworth Road
Perivale UB6 7JD
Tel: 020 8998 7486
Fax: 020 8998 8615

DS
MS
MF
TRADE DISCOUNT WAREHOUSES
Tiles, Bedrooms, Lighting, Wallpapers, Mosaics and Wooden Flooring
Kitchen, Bathroom, Showers, Plumbing, Electrical and Ironmongery Merchants
Marble, Granite, Limestone, Fabrication works, Kitchen Worktops, Vanity tops and Coving
Unit 21/22/25, Cumberland Business Park, Cumberland Avenue, Park Royal (off Abbey Road), London NW10 7RT
Tel: 0208 961 7003 Fax: 0208 961 7030
Email: info@mastersupplies.com www.mastersupplies.com

# 3,000 தபாலகங்கள் மூடும் நிலை

மூன்று ஆண்டுகளுக்குள் புறநகர்ப் பகுதிகளில் உள்ள 3,000 தபாலகங்களை மூடும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டது. இலண்டனிலும் பல தபாலகங்கள் மூடப்பட்டு வருகிறது. பல தபாலகங்கள் மிகச் சில வாடிக்கையாளர்களுக்கே சேவைகளை வழங்குவதாகவும் இப் பிரச்சினையை தெரியப்படுத்த வேண்டி இருப்பதாகவும் தபாலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் உதவித் தபாலதிபர்கள் தமது வாழ்க்கையை கொண்டு செல்ல வேண்டி இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த 3,000 தபாலகங்கள் மூடப்பட்டாலும் 95 வீதமான மக்களுக்கு ஒரு மைல் சுற்றாடலிலேயே தபாலகங்கள் இருப்பதை அப்பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

# நிம்மதியைக் குலைக்கும் பொருளாதாரம்

பிரித்தானியாவின் வளர்ந்த கால் பங்கு மக்கள் பொருளாதாரப் படுகுழிக்குள் வீழ்ந்து தவிப்பதாக யூன் 14ம் திகதி வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை தெரிவிக்கிறது. இப்பொருளாதாரப் பிரச்சினையில் 15 மில்லியன் பிரித்தானியர்கள் சிக்கி உள்ளனர். இப்பொருளாதார நெருக்குதலால் விவாகரத்து, அதிர்ச்சி, மது அருந்துதல் போன்ற சமூகப் பிரச்சினைகள் ஏற்படுவதாக அவ்வறிக்கை தெரிவிக்கிறது. இதன் காரணமாக 7 மில்லியன் பேர் தூக்கமிழக்கின்றனர், 5மில்லியன் பேரின் உறவு நெருக்கடிக்கு உள்ளாகிறது, 2 மில்லியன் பேர் வரை போதைக்கு அடிமையாகின்றனர்.

இருந்தும் மக்கள் இப்பிரச்சினைக்கான காரணத்தை தெரிந்து கொள்ள மறுக்கின்றனர் என்கிறது அவ்வறிக்கை. தீக்கோழியைப் போல் மண்ணுக்குள் தலையை புதைத்தால் பிரச்சினைகள் தானாகவே தீர்ந்துவிடும் என மக்கள் எண்ணுவதாக அவ்வறிக்கை தெரிவிக்கிறது. இப்பிரச்சினையை உதாசீனப்படுத்தி விட்டு காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்ற மனோபாவம் பலரிடம் காணபடுவதும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

# கென் லிவிங்ஸ்டனின் போக்குவரத்துக் கட்டணம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்

தலைநகருக்குள் நுழைய இவ்வாண்டு பெப்ரவரி முதல் ஆரம்பிக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டண முறையை போக்குவரத்துத் தொடர்பான அழுத்தக் குழு Transport 2000 வரவேற்று உள்ளது. இதன் பிரதிநிதி ஸ்ரீவ் ஹன்ஸ்ஹாம் தெரிவிக்கையில் இலண்டனில் போக்குவரத்துக் கட்டணம் அறவிடப்படுவதில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதுடன் கென் லிவிங்ஸ்டனின் திறமையையும் ஸ்ரீவ் பாராட்டி உள்ளார்.

இலண்டனைப் பின்பற்றி பிறிஸ்டல், எடின்பறோ ஆகிய நகரங்களும் விரைவில் போக்குவரத்துக் கட்டணத்தை அறிமுகப்படுத்த உள்ளது. கேம்பிரிட்ஜ், றெடிங், மில்ட்டன் கீன்ஸ் ஆகிய நகர்களும் போக்குவரத்துக் கட்டணத்தை அறவிடுவது பற்றி ஆலோசிக்கின்றனர்.

பெரும்பாலான பெரும் தெருக்களும், விரிந்து செல்லும் எம்1, எம்6, எம்25 இன் வீதிகளுக்கும் போக்குவரத்துக் கட்டணம் அறவிடப்பட வேண்டும் என்கிறார் ஸ்ரீவ். போக்குவரத்தைக் கட்டுப்படுத்த இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை எனக் குறிப்பிடுகிறார் அவர். அவர் மேலும் குறிப்பிடுகையில் புதிய தெருக்களை அமைப்பது போக்குவரத்து நெரிசலை அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# வாகனம் ஓட்டும் போது கைத்தொலைபேசியில் உபயோகித்தால் £30 அபராதம்

வாகனத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் போது கைத்தொலைபேசியில் பேசினால் £30 பவுண்கள் அபராதம் விதிக்கப்பட உள்ளது. வெய்யிற்கால முடிவில் இப்புதிய விதிமுறை அமுலிற்குக் கொண்டுவரப்பட உள்ளது. மேலும் அடுத்த 18 மாதங்களில் அபராதத்துடன் வாகன அனுமதிப் பத்திரத்தில் இருந்து 3 புள்ளிகளை நீக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. வாகனம் ஓட்டும் போது கைத்தொலைபேசியை வைத்து கதைப்பது ஆபத்தானது என்பது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டு இருப்பதால் இந்த விதிமுறை அமுல்படுத்தப்பட உள்ளது. மேலும் வசதியானவர்களுக்கு அபராதத்தைச் செலுத்துவது ஒரு பிரச்சினையாக இல்லாததால் வாகன அனுமதிப் பத்திரத்தில் இருந்து புள்ளிகளை நீக்க வேண்டும் என்பதும் திட்டமிடப்பட்டு உள்ளது.

# வேகத் தடையை மீறுபவர்கள் நடமாடும் கமராவில் மாட்டுவார்கள்

யூன் 11ல் தலைநகரில் வேகத் தடையை மீறுபவர்களை பிடிக்க புதிய நடமாடும் கமராக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இரண்டு நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட கமராக்களுக்கு இடையே வைக்கப்பட உள்ள இந்த நடமாடும் கமராக்கள், நிரந்தரமாக கமராக்கள் உள்ள இடங்களில் வேகத்தைக் குறைத்து பின் வழமை போல் பறக்கும் வேகத்தில் செல்லும் வாகனங்களை கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்பட உள்ளது. மஞ்சள் - நீல வர்ணங்கள் கொண்ட வக்சோல் வானில் இந்தக் கமராக்கள் இணைக்கப்பட்டு நேரத்திற்கு நேரம் இடம்மாற்றப்பட உள்ளது. இப்படியான 5 வாகனங்கள் தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது.

கமராக்கள் எங்கு வைக்கப்பட உள்ளது என்ற விபரம் (www.tfl.gov.uk/lscp) இணையத்தளத்திலும் பிரதான வானொலிகள் மூலமும் அறிவிக்கப்படும் என இலண்டனுக்கான போக்குவரத்துப் பகுதி தெரிவிக்கிறது. விபத்துக்கள் அதிகம் இடம்பெறும் சாத்தியமுள்ள பகுதிகளில், பாடசாலை மற்றும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இந்த நடமாடும் கமராக்கள் வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனை மோட்டார் வாகன அமைப்புகள் வரவேற்று உள்ளன. ஆனால் காவல்துறையினர் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் வருமானத்தை அதிகரிக்கும் மற்றுமோர் நடவடிக்கையாகவும் இது கருதப்படுகிறது.

இப்புதிய நடவடிக்கை சாரதிகளின் மனோபாவத்தில் மாற்றத்தைக் கொண்டுவரும் என இதனை அறிமுகப்படுத்தும் London Safty Camera Partnership அமைப்பு தெரிவிக்கிறது. கடந்த ஆண்டு தலைநகரில் வாகன விபத்தில் 280 பேர் கொல்லப்பட்டும் 5,370 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

# உதயன் பற்றி...

கடந்த 8 வருடங்களாக வெளிவரும்; அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்ட; தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை உதயன். தமிழ் சமுதாயத்திற்கு பயன் உள்ள வகையில் சமூக நோக்குடன் தேசிய அளவில் வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஒரே தேசிய பிரித்தானிய செய்தி தமிழ் பத்திரிக்கை பற்றி உங்களுக்கு...

பல்லாயிரம் வாசகர்களின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்ற உதயனை இலவசமாக வாசிக்க அளிப்பவர்கள்:


டாக்டர். இரவிக்குமார் (சற்குரு சுவாமிகள்)
நிறுவனர்-ஆசிரியர்


அன்னை காயத்ரி
நிறுவனர்-துணை ஆசிரியர்


திரு.த.புஷ்பலிங்கம்
விளம்பர பொறுப்பாளர்


திரு.த.ஜெயபாலன்
தலைமை நிருபர்


ர கொன்ஸன்ரைன்
செய்தி ஆய்வு நிருபர்

துணை நிருபர்கள் :
கே அரவிந்தன் (இலண்டன்)
ஜெ வெற்றிச்செல்வன் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கெ பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

மற்றும் :
புலனாய்வு நிருபர்கள், விநியோகஸ்தர்கள்

உதயன் : அதிக பிரதிகளை பிரசுரிக்கும் பரந்த விநியோகத்தைக் கொண்ட தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிக்கை.

தொடர்புகளுக்கு: Global News Media GNM (PVT) LTD., 25-27 High St., Edgware, Middx. HA8 7EE Tel: 020 8952 5677

உதயன் நடுநிலைமை கொண்ட மக்களின் நண்பன். உதயன் எப்போழுதும் உண்மைகளை மட்டுமே ஒருசார்பற்றமுறையில் பேதமின்றி உண்மைகளை வெளியிடும் ஒரே பத்திரிக்கை.

The UDHAYAN உதயன்
ADVERTISE FOR BEST RESULTS 020 8952 5677

Katherine & King's College of London
Minavil House, Ealing Road, Wembley HA0 4EL
* Excellent Location: opposite Alperton Tube Station, good transportation links
* Multi-Disciplines: Accounting, Management, Computer, English
* Various Levels: From Certificate to Degree suitable for anyone over 16.
* Flexible Payment Options: Ten Monthly Instalments
* Diverse Study Modes: Full-time, Part-time (Daytime, Evening, Weekend.)
* Starting Date Available All Year Round
Please call 020-8795 1600 for more.....
Monday – Friday (9am – 6pm)

Boston College of London
The Best College of the year 2002
Certificate, Diploma, Advance Diploma & PGD in
✓ TTH Travel Tourism & Hospitality Management
✓ Business Administration ✓ ACCA, CAT (Accountancy)
✓ Hotel Management ✓ BBA, MBA, BIT, MIT & PhD
✓ Journalism Management ✓ IT
Accredited by the British Accreditation Council for Independent Further and Higher Education
Boston College of London has been named award winner for the year 2002 in the category of International Education & Training by the UK based Leeds & Yorkshire Times in June 2002.
* Small size classes * Help with visa application & Accommodation
* Highly qualified lecturers * Airport collection facility
15 Leeland Road, West Ealing, London W13 9HH, UK
Tel: 0044-208-8101 888 Fax: 0044-208 8100848
email: info@bcluk.co.uk
Web: www.bcluk.co.uk

"The UDHAYAN" Published by [Global News Media] GNM (PVT) LTD. in London at, I Floor 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K. Tel: 020 8 905 7775 Fax: 020 8952 5677 e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

# உள்துறையும் நீதித்துறையும் மோதல்



சட்டத்துறையில் அதிரடி மாற்றங்களைக் கொண்டு வந்து நீதிபதிகளின் அதிகாரத்தை குறைக்க உள்துறை அமைச்சுச் செயலாளர் முயற்சிப்பதை அடுத்தே இந்த முறுகல் நிலை ஏற்பட்டு உள்ளது. இதனை அடுத்து வலதுசாரிப் போக்குடைய கடும்போக்காளரான உள்துறை அமைச்சருக்கும் நீதித்துறையினருக்கும் இடையிலான மோதல் மீண்டும் வலுத்து உள்ளது. அகதிகளுக்கு எதிரான கடும் சட்ட திட்டங்களைக் கொண்டு வந்த போதும் இந்த மோதல் நிலை காணப்பட்டது.

தற்போது குற்றவியல் வழக்குகளில் புதிய மாற்றங்களை உள்துறை அமைச்சர் வெளியிட்டு உள்ளார். இம்மாற்றங்களின் படி பாரதூரமான குற்றவியல் வழக்குகளில் தண்டனையை நிதிபதிகள் மட்டும் தீர்மானிக்க முடியாது என்றும் என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் பொலிஸார், சிறை அதிகாரிகளுடன் பாதிக்கப்பட்டவரின் பிரதிநிதியின் அபிப்பிராயமும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்படுகிறது.

பொதுவாக நீதித்துறை சட்டத்தை அமுல்படுத்தும் காவல்துறையுடன் தொடர்பில்லாமல் சுயாதீனமாகவே இயங்கி வருகிறது. இது பிரித்தானிய நீதித்துறையின் பாரம்பரியம் தனித்துவம். ஆனால் தற்போது அமைச்சர் பிளங்கெட்டின் மாற்றங்கள் அதனை இல்லாமல் செய்கிறது. தண்டனை வழங்குவதில் பாதிக்கப்பட்டவரின் அபிப்பிராயம் பெறப்படுவது பழிவாங்கல் தன்மையை ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகிறது.

நாட்டின் இறைமையையும் உள்துறை அமைச்சரின் உணர்ச்சிவசப்பட்ட மாற்றங்களையும் சமப்படுத்த நீதித்துறை உள்துறை அமைச்சுடன் தொடர்ந்தும் மோதி வருகிறது. அமெரிக்க நீதித்துறையை பிரித்தானியாவில் புகுத்தவும், நீதித்துறையில் அரசியல் தலையீட்டை தவிர்க்கவும் நீதித்துறை உள்துறை அமைச்சருக்கு சவாலாகவே செயற்படுகிறது.

# அமெரிக்க கூட்டுப் படைகளின் தாக்குதலில் 3,240 ஈராக்கியர்கள் பலி

ஒரு மாத கால ஈராக் மீதான தாக்குதலில் 3,240 பொது மக்கள் கொல்லப்பட்டதாக 60 மருத்துவ மனைகளில் இருந்து எடுக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளில் இருந்து தெரியவருகிறது. யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட மார்ச் 20 முதல் பாரிய யுத்தம் முடிவுக்கு வந்ததாக அமெரிக்க - பிரித்தானியப் படைகள் அறிவித்த ஏப்ரல் 20 வரையான ஒரு மாத காலப் பகுதியிலேயே இவ்வளவு இழப்பு ஏற்பட்டு இருந்தது. இன்னும் 64 மருத்துவமனை அறிக்கைகள் சேர்க்கப்படவில்லை. மேலும் பலர் தாக்குதல் இடத்திலேயே பலியாகிப் புதையுண்டனர் இன்னும் பலர் இஸ்லாமிய முறைப்படி உடனடியாகவே அடக்கம் செய்யப்பட்டனர். அதனால் பலியானவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க, பிரித்தானிய படைகள் பொது மக்கள் இழப்புகளை அறிய முயற்சிக்கவில்லை. தாங்கள் மக்களை இலக்கு வைத்து தாக்கவில்லை என்று குறிப்பிட்ட பென்டகன் அதிகாரி அதனால் இழப்புகளை எண்ணுவதற்கு தேவை இருக்கவில்லை எனக் குறிப்பிட்டு உள்ளார். 1991 இல் வளைகுடா யுத்தத்தில் 2,278 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

யுத்தகாலப் பகுதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மக்கள் கொல்லப்பட்டதை அறிவித்த மேற்கு நாட்டு ஊடகங்கள் சில நூறு மக்களே கொல்லப்பட்டிருக்கலாம் என்பது போன்ற தோற்றத்தை தங்கள் மக்களுக்குத் தெரிவித்தன. அதன் மூலம் அமெரிக்க - பிரித்தானிய கூட்டுப் படைகளின் தாக்குதலை மறைமுகமாக அவை நியாயப்படுத்தின. ஆனால் யுத்தம் முடிந்த பின்னர் மக்கள் அது பற்றி அவ்வளவு கவனம் செலுத்தாத சூழ்நிலையில் தற்போது 3,240 பேர் கொல்லப்பட்ட செய்தி நாசுக்காக வெளியிடப்பட்டு உள்ளது. The Assosiated Press ஏ இந்த மதிப்பீட்டை வெளியிட்டு உள்ளது.

# உதவி வழங்கலில் மெத்தனம்

வருமானம் குறைந்த குடும்பங்களினதும் குழந்தைகளுடைய குடும்பங்களினதும் பொருளாதாரத்தை வளம்படுத்த வழங்கப்பட வேண்டிய உதவியில் மெத்தனப் போக்கு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறைந்த வருமானத்தை உடைய 500,000 குடும்பங்கள் உதவித் தொகைக்காகக் காத்திருப்பதாக வருமானவரி வாரியம் தெரிவிக்கிறது. இந்நிதியாண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட Working Tax Credit & Child Tax Credit ஆகிய உதவிகளைப் பெறுவதற்கான தொடர்பிலக்கங்கள் அழைப்புகளால் மிகுந்த நெருக்குவாரத்திற்கு உள்ளாகி உள்ளது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் முதல் இவ்வாண்டு மார்ச் வரை மூன்றில் ஒரு பகுதியான 1.7 மில்லியன் அழைப்புகள் பதில் கிடைக்காமலேயே துண்டிக்கப்பட்டு உள்ளது. பொருளாதார நிலையில் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்நிலை இதனால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது.

# தாய்மாரை வேலைக்குச் செல்ல வற்புறுத்தல்

குழந்தைகளுடைய தாய்மாரையும் வேலைக்குச் செல்ல அரசு நிர்ப்பந்திக்கிறது. யூன் 12ல் வெளியிடப்பட்ட அரச அறிவித்தல் குழந்தைகளை உடைய தாய்மாரையும் வேலைக்குச் செல்லும்படி கேட்டு உள்ளது. பெண்கள் மகப்பேற்றின் பின்னரும் வேலைக்குச் சென்று நாட்டின் பொருளாதாரத்துக்கு உதவுவதுடன் அவர்கள் படிக்கும் போது அரசுக்கு ஏற்பட்ட செலவை மீளச் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர்கள் கேட்டு உள்ளனர்.

பெண்கள் வீட்டில் சம்பளம் பெறாமல் செய்யும் வேலைகளை அமைச்சர்கள் கவனிக்கத் தவறி உள்ளனர். வேலைக்குச் செல்லாமல் தங்கள் குழந்தைகளைப் பராமரிக்க விரும்பும் பெண்களை அதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்களை வேலைக்குச் செல்ல பெரிய ஆசாமியாக வற்புறுத்த முடியாது என்ற கருத்து வெளியே தெரிவிக்கப்படுகிறது.

# கூரையைத் தொடும் தஞ்சக் கோர்வைகள்

தஞ்சக்கோர்வைகள் கூரையைத் தொடும் உயரத்திற்கு தேங்கி இருப்பதாக குடிவரவு அமைச்சர் பெவர்லி கியூச் தெரிவித்து உள்ளார். வரும் விண்ணப்பங்களை சரியாகப் பதிவு செய்து அதனை பேணுவதற்கே முடியாது இருப்பதாகவும் அவர் ஒத்துக் கொண்டு உள்ளார்.

இந்த நிலைக்கான முழுப் பழியையும் எதிர்க் கட்சியான ரோறியின் மீது கியூச் போட்டு உள்ளார். 1997ல் தொழிற்கட்சி பதவி ஏற்கும் தறுவாயில் புதிய கணணிமுறையை அறிமுகப்படுத்த முன்னரேயே 1,200 அனுபவம் மிக்க அலுவலர்களை வேலை நீக்கம் செய்ததை கியூச் சுட்டிக்காட்டினார். அக்காலகட்டத்தில் கோசோவோவில் இருந்தும் ஈராக்கில் இருந்தும் பெருமளவு அகதிகள் புலம்பெயர்ந்தனர். 1998ல் புதிய கணணி முறை அறிமுகப்படுத்தப்பட்ட போதும் தாமதங்கள் ஏற்பட்டது. இதையே தற்போதைய தஞ்ச விண்ணப்ப தேங்கலுக்கு முக்கிய காரணம் என கியூச் தெரிவிக்கிறார்.

# ஐரோப்பிய நாணய இணைவு தாமதம்

ஈரோ நாணயத்துடன் பிரித்தானிய பவுண் இணைவு மேலும் தாமதப்படுத்தப்பட்டு உள்ளது. நாணய இணைவுக்கான பொருளாதார சூழல் இன்னமும் ஏற்படவில்லை என நிதி அமைச்சுச் செயலாளர் கோர்டன் பிறவுண் அறிவித்து உள்ளார். இணைவுக்கு தயாராகிக் கொண்டு இருக்கிறோம் என்று குறிப்பிட்டு இணைவுக்கு ஆதரவானவர்களை நிதி அமைச்சுச் செயலாளர் ஆசுவாசப்படுத்தி உள்ளார். பிழையான அனுபவத்தைப் பெற அதிக காலத்தை வாங்கி இருப்பதாக எதிரணியினர் தெரிவிக்கின்றனர்.

ஐரோப்பா முழுவதும் ஒரு நாணயமாக இருக்கும் போது பிரித்தானியாவில் மட்டும் வேறொரு நாணயம் இருப்பது வர்த்தகத்திற்கு தடையாக இருப்பதாக பிரித்தானியாவின் முன்னணி வர்த்தக ஆர்வலரான றிச்சட் பிறவுண் தெரிவிக்கிறார். அடுத்த 3 ஆண்டுகளுக்குள் பிரித்தானிய பவுண் இல்லாமல் போகலாம் என அறிவிக்கப்படுகிறது.

# விற்றமின் மாத்திரைகள் இதயத்திற்கு நல்லதல்ல

விற்றமின் ஏ மற்றும் பீற்றா கரோற்றின் மாத்திரைகள் இதயநோயைத் தூண்டும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். விற்றமின்கள் நன்மை அளிப்பதிலும் அதிகம் தீமையே விளைவிப்பதாக Food Standard Agency அறிவித்த சில வாரங்களிலேயே விஞ்ஞானிகள் புதிய எச்சரிக்கையை வெளியிட்டு உள்ளனர். கரட், தக்காளி, புறொக்கோலி ஆகிய காய்கறிகளில் உள்ள நிறப் பொருட்கள் இறுதியில் விற்றமின் ஏ க்கு மாற்றப்படுவதால் மாத்திரைகளைத் தவிர்த்து காய்கறிகளை உண்பது நல்லது என ஆலோசனை வழங்கப்படுகிறது.

சமூக அந்தஸ்துடன் கூடிய நிலையான வருமானம் மாதம் ஒன்றிற்கு **£125 - £450**வரை தேவையா? உடனே நாடுங்கள் உதயன் நிருபராக பணிபுரிய. ஆங்காங்கே செயலாற்றும் எமது பெரும் நிருபர் குழுவில் நீங்களும் ஒருவராகுங்கள். உங்களது புகைப்படமுடன் முழு பயோடேடாவையும் வைத்து உடனே

அனுப்பவேண்டிய முகவரி:

email: thelondon@udhayan.freeserve.co.uk

(அ) 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K.யின் தேசிய தமிழ் பத்திரிக்கையில் பங்குகொண்டு சமூக பெருமையை பெற்றிடுங்கள்*.

* 3 வருட ஒப்பந்தம் கையொப்பமிடல் அவசியம்.

**Restaurant FOR SALE**

Restaurant with full on licence
Next to Tube Station
Within residential area
V.good location
Long Lease

CALL TONI **07973 503836**

**ALLIED MOTORS U.K.**
MECHANICAL & CRASH REPAIRS
Specialists in British, Continental and Japanese Cars.
Servicing, repairs, tuning, insurance work undertaken
Breakdown Service
MOT while you wait
Open: MON - FRI 8.30am to 7.00 pm
SAT 8.30am to 5.00pm
Abbey Estate, Mount Pleasent, Wembley, Middx. HA0 1QT
Tel: 020 8903 5466
Fax: 020 8900 0120

Excellent position
**Double Unit Vegetarian Restaurant for Sale**
658/660 Kingsbury Road, London NW9 9HN
Call Yogi
**07811 275522**

*F/h Shop with 2 Bed Flat*
CONVENIENT STORE + Off-Licence
POST OFFICE *(7 miles from Croydon)*
**FOR SALE**
Takings - 5,000
P.O. Salary - 16,000
£ 230,000
**Tel: 01883 343692**

CAM Carpets & Furnitures
NEWLY OPEN Offers Tel: 8903 7350
BUDGET BED £ 59
ORTHOPAEDIC BED £ 89
Italian DINING Set + 6 Chairs & CARPETS £ 535
We can beat any quote
424, HIGH ROAD, WEMBLEY

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்துடன் யாழ் நூலகம் இணையத்தில் இணைவு

யாழ் நூலகத்தையும் கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தையும் இணைக்க மேற்கொண்ட முயற்சியின் முதற்கட்டம் வெற்றி அளித்து உள்ளது. யூன் மாதம் 1ம் திகதி யாழ் நூலகத்தின் 22வது நினைவு தினம் ஸ்ரட்பேர்ட் நூலகத்தில் இடம்பெற்றது. சமூகசேவகர் ரி ஜீவரட்ணம், கவுன்சிலர் போல் சத்தியநேசன் ஆகியோர் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். அங்கு அரங்கம் விஷன் மேர்கர்ஸின் மறு உதயம் என்ற யாழ் நூலகம் பற்றிய விவரணப்படமும் காண்பிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் Rising From the Ashes - Tragic Episode of Jaffna Library என்ற நூல் வெளியீடு முக்கிய நிகழ்வாக இடம்பெற்றது. யாழ் நூலகம் பற்றி ஆங்கிலத்தில் வெளியான கட்டுரைகளை என் செல்வராஜா தொகுத்து ஆவணமாக்கி இருந்தார். இந்த நூல், நூலகம் பற்றிய முழுமையான ஒரு படத்தை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டும் வகையில் அமைந்து உள்ளது. இந்நூல் சர்வதேச அமைப்புகளுக்கு யாழ் நூலகத்தின் வரலாற்றைத் தெரியப்படுத்தி நூலகத்திற்கு பல நன்மைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நூலை வெளியிடுவதில் பி நவேந்திரன், எஸ் சிறிராஜன், பி இரவீந்திரமோகன், ரி கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கி உள்ளனர்.

நூலை அறிமுகப்படுத்திய பேராசிரியர் கோபன் மகாதேவா இங்கு தொகுக்கப்பட்டு உள்ள கட்டுரைகள் மிகவும் ஆழமாக ஆராயப்பட்டு நூலக எரிப்புப் பற்றிய முழுமையான செழுமையான வரலாற்றுப் பதிவு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கலாநிதி மேரி டேவிஸ் இணைய வலயத்தில் இரு ஸ்தாபனங்களையும் இணைக்க உறுதியளித்து உள்ளார். கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தின் கல்வித் திட்ட இயக்குநராக உள்ள இவர் யாழ் நூலகம் 22 ஆண்டுகளுக்கு முன் எரிக்கப்பட்டதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்ததாகவும் இனிமேல் அப்படியான நிகழ்வு இடம்பெறாது என்பது உறுதி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.


(கலாநிதி மேரி டேவிஸ்)

தலைமை வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சத்தியசீலன் மொழியைக் கைவிட்ட பல சமூகங்கள் தமது அடையாளத்தை இழந்த வரலாற்றைச் சுட்டிக் காட்டினார். புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆங்கிலத்துடன் தமது தாய் மொழியையும் கற்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வெளியிட்டார்.

யாழ் பல்கலைக்கழகத்தையும் கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்தையும் கூட இணையவலயத்தில் இணைக்க விரைவில் நடவடிக்கை எடுக்க ஏற்பாடாகி உள்ளது. பேராசிரியர் சத்தியசீலன் இது பற்றி யாழ் பல்கலைக்கழகத்துடன் கதைத்து நடவடிக்கை எடுக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

யாழ் நூலகத்தின் அவசரத் தேவைகளை அதன் இணைப்பாளர் என் செல்வராஜா வெளியிட்டார். அவற்றில் சிலவற்றைத் தாங்கள் விரைவில் தீர்த்து வைக்க முடியும் என கலாநிதி மேரி டேவிஸ் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

# நிபுணத்துவம் கேள்விக்கு உள்ளானது

திருப்ரி பட்டேலின் வழக்கில் அரச தரப்பில் நிபுணத்துவ சாட்சியம் அளித்த பேராசிரியர் சேர் றோய் மிடோவின் சாட்சியம் கேள்விக்கு உள்ளாகி உள்ளது. பல ஆண்டுகளாக கொட் டெத் என்கின்ற குழந்தைகளில் ஏற்படும் தொட்டில் மரணம் தொடர்பான வழக்குகளில் சாட்சியமளித்து வரும் இவர் ஒரு வழக்கிற்கு £3,000 - £4,000 அறவிடுகிறார்.

ஜனவரியில் இடம்பெற்ற ஒரு வழக்கில் சட்டத்தரணியான சலி கிளார்க் என்ற தாயார் தன் இரு குழந்தைகளையும் கொலை செய்ததற்கான சாத்தியத்தை பேராசிரியர் மிடோ குறிப்பிட்டார். அவரது நிபுணத்துவ கருத்துப்படி ஒரு தாய் இரு குழந்தைகளை தொட்டில் மரணத்தில் இழப்பதற்கான சாத்தியம் 73 மில்லியனுக்கு ஒன்று என்று குறிப்பிட்டார். அனால் அது பற்றிய ஆய்வுகள் நூற்றில் ஒன்று என்பது அங்கு நிருபிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திருப்ரி பட்டேலின் வழக்கில் சாட்சியம் அளித்த பேராசிரியர் தொட்டில் மரணம் பரம்பரையாக ஏற்படாது என்றும் குற்றம் சாட்டப்பட்டவர் தான் 3 குழந்தைகளையும் கொலை செய்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். ஆனால் திருப்ரி பட்டேலின் அம்மம்மா இந்தியாவில் இருந்து வந்து தனது 5 குழந்தைகளை இழந்ததை குறிப்பிட்டதும் பரம்பரைத் தொடர்பு இருப்பதற்கான சாத்தியம் வெளிப்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர் நிரபராதி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இப்போது பேராசிரியர் மீடோ சாட்சியமளித்த தொட்டில் மரணம் தொடர்பான வழக்குகளை மீளாய்வு செய்யுமாறு ஏற்கனவே தண்டனை பெற்ற தாய்மார்கள் குரல் எழுப்பி உள்ளனர். தொழிற்கட்சி பா உ ரொனி கொல்மனும் பேராசிரியர் மிடோ சம்பந்தப்பட்ட வழக்குகளை மீளாய்வு செய்யுமாறு கேட்டு உள்ளார். ரொறி பா உ சேர் பற்றிக் கோர்மக் பேராசிரியரின் நிபுணத்துவம் கேள்விக்கு உள்ளாகி உள்ளதாகக் குறிப்பிட்டு உள்ளார்.


**Hall Hire**

திருமணம், பிறந்தநாள் வைபவங்கள், மீட்டிங்குகள், கலை-கலாச்சார நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மற்றும் இதர வைபவங்களுக்கு பாக்ஸ் ஓபிஸ், 200க்கும் மேற்பட்ட இருக்கை வசதி, 350பேருக்குறிய கொள்ளளவு, அன்மையில் புதுப்பிக்கப்பட்டதும், டாய்லட், ஒலிபெருக்கி இயந்திரங்கள், சிறப்பு அதிக ஒளி-விளக்குகள், சீறியல் அலங்கார விளக்குகளுடன் முதல் மாடியில் அமைந்துள்ள அருமையான இந்த ஹாலை புக் செய்ய நாடுங்கள் **020 8905 7775**

(விதிமுறை: மாமிச உணவு, மதுபானம் அருந்துதல், உள்ளுக்குள் புகைபிடித்தல் தவிற்க வேண்டும்.)

**FURNITURE KING**

FREE LOCAL DELIVERY — FREE ASSEMBLEY

| | |
|---|---|
| 3 Door Pine Wardrobe From £199.99 | Beds From £69.99 Metal frame complete with sprung mattress,etc. |
| 2 Door Pine Wardrobe From £129.99 | |
| 5+2 Drawer Pine Chest From £89.99 | Dining Sets Many different styles & designs From £99.99 |
| 3 Drawer Pine Chest From £29.99 | Nest of Tables, Coffee Tables, Bookcases, Computer Desks, etc. From £29.99 |
| BELMONT CIRCLE, HARROW 020 8931 8686 www.furniture-king.co.uk | 30 Watling Avenue, Burntoak, Tel: 020 8951 5513 info@furniture-king.co.uk |



**FUNTASIA**
*The Party Shop*

BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES

சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான அலங்கார சோடனைகளுக்கு நாடுங்கள் Funtasia

229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

**TRICO SHIPPING WORLDWIDE**

Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.

Special Rates:- COUCHIN, TREVENDRAM, BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days

**20 YEARS IN SERVICE**

Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

**Panesar Electrical Co.**
EST 1981

மலிவு விற்பனை

12W Split Load Consumer Unit RCD + Main Switch 8 MCBs *Only £85.95*

12V LV Lamps 20W/35W/50W *Buy 10 for £10.00 and get 2 free!*

Mains Spotlight C/W 3x 50w Lamps *Only £23.95!* Chrome, Brass or White

Xpelair DX100T 4" Timer Fan C/W Wall + Window Kit *Only £22.95! While Stocks Last!*

OFFERS ONLY AVAILABLE WITH THIS ADVERT
ALL PRICES INCLUDE VAT

364 High Street North, Manor Park, London E12 6PH
Tel: (020) 8472 1873, Fax: (020) 8471 6271

**SiGN FiT**
*The Company of Dynamic Ideas.*
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

**SIGN★A★RAMA**
"WHERE THE WORLD GOES FOR SIGNS"
*For all your Signage needs*
Shop Fascias, Window Graphics, Pavement Boards and much more
**0800 634 0096**
220 Church Lane, Kingsbury London NW9 8SN
www.signking.net
ISO 9001 REGISTERED FIRM Reg. No. 8876

**இந்து தகவல் ஏடு**
இரண்டாம் வெளியீடு 2003
மிக அதிக புதிய விளக்கங்களுடன் விரைவில் வெளிவருகிறது




கண்ணியமான நல்ல நோக்குடன் வெளிவரும் இந்த இந்து சமய தகவல் ஏட்டினை ஒவ்வொருவரும் விரைந்து சென்று பெற்றிடுவீர்
இலவசம்
இலவசம்
இலவசம்




**Subscribe Udhayan only £10 p.a.**

**Taste of Asia**
Halal Restaurant and Takeaway
OPEN NEW
* Srilankan Special
* Sunday Buffet only 4.99
* Party Orders
020 8424 2151
3, Masons Avenue, Harrow Wealdstone

# பஸ்சுக்கு காத்திருந்தவரை கோடரியால் தாக்கியவருக்கு தண்டனை இரட்டிப்பு

பஸ்சுக்கு காத்திருந்த வாலிபர் ஒருவரை கோடரியால் தாக்கிய தமிழ் இளைஞர் கோஸ்டியைச் சேர்ந்தவருக்கு வழங்கப்பட்ட தண்டனை போதாது என்பதால் தண்டனை இரட்டிப்பாக்கப்பட்டது. Lancelot Rd, Wembly ல் வசிக்கும் தேவா ஜெயசுந்தர் (23) என்பவருக்கு வழங்கப்பட்ட தண்டனை அண்ணளவாக இரட்டிப்பாக்கப்பட்டது. கரோ கிறவுன் நீதிமன்றத்தில் வேண்டுமென்று திட்டமிட்டு உடற்காயம் ஏற்படுத்தியதற்காகவும் வன்முறை செய்ததற்காகவும் கடந்த நவம்பரில் தேவா சுந்தர் குற்றவாளியாகக் காணப்பட்டு இரண்டு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் இத்தண்டணை போதாது என சட்டவாதி பிரபு கோல்ட்சிமித் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குற்றவியல் மேன் நீதிமன்றம் தேவா ஜெயசுந்தரின் தண்டணைக் காலத்தை மூன்றரை வருடங்களுக்கு உயர்த்தி உள்ளது.

**பின்னணி :** யூன் 15 2001 அன்று அமிற் பட்டேலும் வேறு இரு வாலிபர்களும் காரோ ஒன் த கில் அன்டகிறவுன்ட் ஸ்ரேசன் முன்பாக பஸ்சுக்கு காத்து நின்றனர். அப்போது ஜெயசுந்தர் உட்பட்ட கோஸ்டி அங்கு வந்து பட்டேலுடன் முரண்டனர். அதனால் வாக்குவாதம் பெருத்தது. ஜெயசுந்தர் கோஸ்டி தாங்கள் தமிழ் புலிக் கோஸ்டி என்றும் நாங்கள் உன்னை கோடரியால் கொத்தி கூறுபோட்டு விடுவோம் என்றும் மிரட்டி விட்டு விலத்திச் சென்றிருக்கிறார்கள்.

சென்றவர்கள் 5 நிமிடத்தில் இரண்டு கோடரிகளுடன் பட்டேல் இருந்த பகுதியை நோக்கி வந்தனர். வந்தவர்கள் பட்டேலின் தலையின் பின் பக்கம் கோடரியால் கொத்தினர். சில நிமிடங்கள் நினைவற்று பட்டேல் கிழே விழுந்தார். விழுந்தவரின் தொடையில் மீண்டும் ஆழமாக கோடரியால் கொத்தியதாக நீதிபதி கூறினார். காயப்பட்ட பட்டேலின் நண்பரும் குத்தித் தாக்கப்பட்டார். கோடரியால் கொத்தியவர்கள் நாங்கள் இலங்கையர்கள் தமிழ்ப் புலிகள் என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றதாக நீதிமன்றத்தில் கூறப்பட்டது. பட்டேல் தாக்கப்பட்டதும் ஜெயசுந்தர் அவ்விடத்தில் நின்றதும் சிசிரிவி யில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதுவே அங்கு முக்கிய சாட்சியமானது.

ஜெயசுந்தர் கோடரியை வைத்திருந்ததற்கோ அல்லது அதனால் தாக்கியதற்கோ அங்கு தகுந்த சாட்சியங்கள் இருக்கவில்லை. அதனால் தாக்கிய குழுவில் ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் குறைந்த பட்சத் தண்டனை வழங்கப்பட்டது. ஜெயசுந்தர் தாக்கி இருந்தால் அல்லது கோடரியை வைத்திருந்தால் அவருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை தீர்க்கப்பட்டு இருக்கும். மற்றையவர்கள் ஆயுதத்தை வைத்திருப்பதை ஜெயசுந்தர் அறிந்திருக்கவில்லை என்பது யூரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

# சின்னத்திரைக்குப் பின்னால்

நடுநிலைத் தன்மையுடன் செயற்படுவதாக கருதப்பட்டு வந்த தீபம் தொலைக்காட்சிக்குப் பின்னால் சிக்கல்கள் ஏற்பட்டு உள்ளதாகத் தெரியவருகிறது. அண்மைக் காலமாக அத்தொலைக் காட்சியின் சில முக்கிய நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் தொழில்நுட்ப உதவியாளர்கள் காணாமல் போயுள்ளனர். இந்த வரிசையில் தொலைக்காட்சியில் தனக்கென ஒரு முத்திரையைப் பெற்ற சுபேந்திரன் தாமோதரன் இறுதியாக வெளியேறி உள்ளார். இதற்கு முன்னர் ஜி எஸ் குமார் என்ற அறிவிப்பாளர் செய்தி தயாரித்து வாசிப்பவர், வெளியேறி இருந்தார். (இவர் மீண்டும் இணைய உள்ளதாகவும் செய்திகள் வந்தள்ளது.) இவர்களுடன் தமிழகத்தைச் சேர்ந்த பன்னீர்ச் செல்வம் என்ற தொழில்நுட்ப உதவியாளரும் வெளியேறி உள்ளார்.

நீண்டகாலமாக எதிரொலி, ஞான தீபம் போன்ற நிகழ்ச்சிகளைத் தயாரித்து, தொகுத்து வழங்கி வந்த சுபேந்திரன் தாமோதரன் நிர்வாகத்துடன் குறிப்பாக நிர்வாக முகாமையாளர் சபானி மனோகருடன் ஏற்பட்ட மனத்தாங்களால் தனது வேலையை மே மாத இறுதிப் பகுதியில் ராஜினாமாச் செய்துள்ளார். ஏனையவர்கள் காணாமல் போவதற்கும் திரைமறைவில் ஏற்படும் கெடுபிடிகளே காரணம் எனத் தெரியவருகிறது. தற்போது ஞான தீபத்தை தமிழகத்தைச் சேர்ந்த சுகி சிவத்தின் சொற்பொழிவைக் கொண்டு நிரப்ப முயற்சி எடுக்கப்பட்டு வருவதை விளம்பரத்தில் காணக்கூடியதாக உள்ளது.

காலைக்கதிரில் இடம்பெறும் எம் என் எம் அனஸின் நேரடிச் சந்திப்பு, கலாநிதி மு நித்தியானந்தனின் நூல் ஆய்வு, பதிவு செய்யப்பட்ட இலக்கிய நிகழ்வுகள், எதிரொலி, ஞானதீபம் ஆகியவை மட்டுமே புலம்பெயர்ந்த வாழ்வியலின் தயாரிப்புகளாக இருந்து வந்தது. இதில் எதிரொலி தொலைக்காட்சிக்கான ஒரு மதிப்பை ஓரளவு வழங்கி இருந்தது. தீபத்தின் அரசியல் போக்கை அது வெளிப்படுத்தி வந்தது.

இப்போது தீபம் தன்னை முற்றுமுழுதான ஒரு பொழுது போக்குத் தொலைக்காட்சியாக கோடம்பாக்கத்தையும் மெகா சீரிசையும் மட்டும் காட்டுவதாக மாறிக்கொண்டு வருகின்றது போன்ற தோற்றம் ஏற்பட்டு உள்ளது. தற்போது பதிவுகள் என்ற யங் ஏசியா ரெலிவிசனின் தாயக நிகழ்ச்சியும் எம் என் எம் அனஸ் தொகுத்து வழங்கும் காலைக் கதிரும் மட்டுமே தீபத்தின் மதிப்பை பேணுவதாக உள்ளது. தற்போது 4 தொலைக் காட்சிகள் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் பார்வையாளர்களின் மீதான தீபத்தின் பிடி தளர்ந்து கொண்டே வருவதாக தீபத்தின் பார்வையாளர்கள் உதயனுக்குத் தெரிவிக்கின்றனர். முகாமைத்துவம் உடன் தமது நிகழ்ச்சிகள் பற்றி கவனம் எடுக்க வேண்டும் என கிங்ஸ்பறியில் வாழும் தீபம் பார்வையாளர் ரவீந்திரன் உதயனுக்குத் தெரிவிக்கிறார்.

# இரட்டைக் கொலைகாரன் செந்தமிழுக்கு இரட்டை ஆயுள் தண்டனை



இரட்டைக் கொலையாளி செந்தமிழ்

இரட்டைக் கொலைகாரன் செந்தமிழ் தில்லைநாதனுக்கு (21) (Chatsworth Ave, Wembly) இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. யூன் 9 அன்று ஓல்ட் பெயிலியில் நீதிபதி பேஜட் இத்தீர்ப்பை வழங்கினார். சுபேந்தர் ராமச்சந்திரனின் (18) கொலை வழக்கில் முதலாவது ஆயுட் தண்டனைத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி நீ சுபேந்தர் ராமச்சந்திரனை வெவ்வேறு விதமாகத் தாக்கி அவருக்கு மோசமான காயங்களை ஏற்படுத்தி உள்ளாய். அவரை நிர்வாணமாக்கி அடித்து பெற்றோலை ஊற்றி எரித்து உள்ளாய் என்று குறிப்பிட்டார். அரவிந்தன் முத்துக்குமாரசுவாமி கொலை வழக்கில் இரண்டாவது ஆயுள் தண்டனையை வழங்கிய நீதிபதி, இத்தாக்குதல் முறையாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்றும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கோடரி வாள் போன்ற கூரிய ஆயுதங்களுடன் ஐவரில் நால்வருக்கு மோசமான காயங்களை ஏற்படுத்தியும் ஒருவரது உயிரைப் பறித்தும் உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த பயங்கரமான கொலைத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு சட்ட உதவி வழங்கப்பட்டது. இதில் குற்றவாளிகளை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் முன்னணி சட்டவாதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. சுபேந்தர் ராமச்சந்திரனின் வழக்கு பிரித்தானிய சட்ட வரலாற்றில் நீண்டகாலம் பெரும் செலவில் மேற்கொள்ளப்பட்ட வழக்கு ஆகும். 7 மாதங்கள் நடந்த இந்த வழக்கிற்கு பிரித்தானிய மக்களின் 17 மில்லியன் பவுண் வரிப்பணம் செலுத்தப்பட்டு உள்ளது. இச்செய்தி பிரித்தானிய தேசியப் பத்திரிகைகளில் முக்கிய செய்தியாக வெளியாகி உள்ளது. இவ்வாறான மனித நாகரிகத்துக்கு புறம்பான காட்டுமிராண்டித் தனமான கோஸ்டி மோதல்கள் இலங்கைத் தமிழ் சமூகத்தின் நன்மதிப்பை மிகவும் மோசமடையச் செய்துள்ளது.

## கொலை வெறியுடன் செயற்பட்ட ஏனையவர்கள் :

இவ்விரு கொலைகளையும் செந்தமிழ் தனித்து மேற்கொள்ளவில்லை. ஒரு கோஸ்டியாகவே இந்தக் கொலைவெறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. இந்த கோஸ்டிக்கு செந்தமிழ் தலைமை தாங்கினான் என நீதிமன்றத்தில் அரசதரப்பு சட்டத்தரணி அப்ரப் ஜப்பர்ஜி தெரிவித்தார்.

சுபேந்தரின் கொலையில் இன்னும் மூவர் கொலைக் குற்றவாளிகளாகக் காணப்பட்டு உள்ளனர்.

கண்ணன் சிவக்குமார் (31) - Borehamwood

பிரதீப் சிவநேசன் (19) - Chalkhill Rd, Wembly

சதீஸ்குமார் அருளானந்தன் (18) - Lancelot Avenue, Wembley

அவர்களில் கண்ணன் சிவக்குமாரிற்கு ஆயுட் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. அவர் தண்டனைக் காலம் முடிய இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என நீதிபதி பணித்துள்ளார். ஏனைய இருவரும் இளம் குற்றவாளிகள் மையத்தில் தடுத்து வைக்கப்பட உள்ளனர்.

அரவிந்தன் முத்துக்குமாரசுவாமி கொலை வழக்கில் செந்தமிழ் தில்லைநாதனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. அத்துடன் அரவிந்தனுடன் காரில் இருந்த பாஸ்கரன் நடராஜா, தவக்குமார் மகாலிங்கம், விஸ்வநாதன் சதீஸ்வரன், பார்த்தீபன் அரியரட்ணம் ஆகிய நால்வருக்கும் மோசமான காயங்களை ஏற்படுத்தியதற்காக செந்தமிழ் தில்லைநாதன் ஒவ்வொருவருடைய காயத்திற்கும் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

## ஏன் இந்தப் படுகொலைகளைச் செய்தார்கள் :

யூன் 18, 2001ல் கிளன்மோர் பரேடின் முன் தங்கள் காரை நிறுத்திவிட்டு அரவிந்தனும் அவரது நண்பர்களும் இருந்தனர். திடிரென அங்கு வந்த செந்தமிழ் தில்லைநாதனும் அவன் கோஸ்டியும் காரில் இருந்தவர்களை கோடரி, வாள் ஆகிய கூரிய ஆயுதங்களால் தாக்கினர். தப்ப முடியாதபடி காரில் மாட்டிக் கொண்டவர்கள் மோசமாகத் தாக்கப்பட்டனர். ஏன் எங்களை அடிக்கிறீர்கள் என அதில் ஒருவர் கேட்டதற்கு பதில் அடியே விழுந்தது. அரவிந்தனின் தலை துண்டிக்கப்பட்டது. அரவிந்தனின் உடலில் 7 வெட்டுக் காயங்கள்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

BABA Cash & Carry
West London's Finest
Specialist in
Beers, Spirits, Wines
& Minerals
Tel: 020 8589 0000
Unit 1C, Chailey Industrial Estate
Pump Lane, Hayes, Middx. UB3 3NB

DISCOUNT CARPETS
& FURNITURE
* Large selection of Carpets, Vinyl, Beds & Wood Flooring
* Unbeatable Warehouse Prices To the Public
* Call us on
020 8838 4232 / 4248
Fax: 020 8838 4233
Unit C Corner of Bashley Road & St. Leonards Road
Park Royal, London NW10 6ST

MALIK DOUBLE GLAZING LTD
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches

Trade & Retail Welcome
020 8459 8811
www.malikdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

KUDOS CONTRACT FURNITURE
Quality furniture to suit your budget
Single Bed From £49.95
Double Bed From £79.95
BARGAIN PRICES
Call us on
020 8893 6192
07887720960
357, Uxbridge Road, Southall

QUALITY RIGID KITCHENS
Suppy Only or Suppy & Fit
* Replacement Doors available any size
* Made to measure Bedrooms
* All makes of Appliances
* Trade account welcome

HEATHROW KITCHENS
140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
020 8813 6952

## இரட்டைக் கொலைகாரன் ...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டது. தன்னை நோக்கிப் பாய்ந்த வாளை தடுக்க முற்பட்டவரின் கை துண்டிக்கப்பட்டது. ஓட்டுனரின் காது வெட்டப்பட்டது. அவரது சுவாசப்பை குத்திக் கிழிக்கப்பட்டது. சில நிமிடங்களிலேயே அக்கார் இரத்தத்தால் தோய்ந்தது.

செந்தமிழின் கோஸ்டியைச் சேர்ந்த ஒருவனின் BMW சுரண்ரப்பட்டு இருந்தது. அதனைச் செய்தது அரவிந்தன் குமாரசுவாமி எனத் தவறாக இனம்கண்டு அரவிந்தன் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். அப்பாவி அரவிந்தனின் குடும்பம் பிரிவுத் துயரால் துடித்தது. ஒரு முழுமையான வாழ்க்கை அரவிந்தனுக்காகக் காத்திருந்த போதும் கொடிய மிருகத்தனம் கொண்ட சிலரால் அர்த்தமற்ற காரணத்திற்காக அந்த வாழ்க்கை முடிக்கப்பட்டது.

பெப்ரவரி 17 - 20 ம் திகதிகளுக்கிடையே சுபேந்தர் ராமச்சந்திரன் செந்தமிழின் கோஸ்டியால் வெவ்வேறு விதமாகத் தாக்கி, மோசமான காயங்களை ஏற்படுத்தி, நிர்வாணமாக்கி, அடித்து, பெற்றோலை ஊற்றி எரித்துக் கொல்லப்பட்டார். இலண்டனை உலுக்கிய இக்கொலையில் சுபேந்தரை அடையாளம் காண கிடைத்த ஒரே தடயமான அவரது பல்லை இலங்கைக்கு எடுத்துச் சென்று அரவிந்தனின் இரத்த உறவுகளுடன் DNA பரிசோதனை நடத்தியே அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டது.

வறுமைக்கோட்டில் வாழ்ந்த தனது குடும்பத்தின் நிலையை மேம்படுத்த இலண்டன் வந்த சுபேந்தர் கரோ கல்லூரியில் கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்று வந்தார். நல்ல எதிர்காலம் சுபேந்தருக்காகக் காத்திருந்ததை அவரின் ஆசிரியர்கள் வெளிப்படுத்தி இருந்தனர். ஆனால் சில மாணவர்கள் சுபேந்தரை கேலி, கிண்டல் செய்து நையப்புடைத்ததால் செந்தமிழ் தில்லைநாதனின் உதவியை சுபேந்தர் கேட்டிருந்தார். அதற்குப் பிரதியுபகாரமாக பாம்பீச் உணவகத்திற்கு சுபேந்தரை அழைத்துச் சென்று 200 பவுண்களுக்கு சாப்பிட்டு இருக்கிறார்கள். சுபேந்தரிடம் பணம் இல்லை. சுபேந்தரின் மாமனாரிற்கும் போன் பண்ணிவிட்டு சுபேந்தரை றோகிறீன் பார்க்கிற்கு காரில் போட்டு கூட்டிச் சென்று தங்கள் கொடிய வக்கிர குணத்தை இந்த இளம் மாணவன் மீது புரிந்து படுகொலை செய்தனர் என தெரியவந்துள்ளது.

## வோல்சிங்காம் சந்தேக நபர்கள் யூரிகள் முடிவெடுக்கவில்லை

ரூற்றிங்கைச் சேர்ந்த நிர்மலராஜ் தம்பித்துரை (23), மிச்சத்தைச் சேர்ந்த மயூரன் (23) ஆகியோரிற்கு எதிராக நோர்புளொக் நோர்விச் கிறவுன் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கிலேயே யூரிகள் முடிவுக்கு வரத் தவறினர். மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் நோர்புளோக் கடற்கரையில் வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டனர். யூன் முற்பகுதியில் இவர்களது வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யூலை 15 2001ல் வோல்சிங்காம் தேவாலயத் திருவிழாவிற்கு சென்று விட்டு திரும்பும் வழியில் தமிழ் வாலிபர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். பொலிஸார் ஆரம்பத்தில் ஐவரை இது தொடர்பாக கைது செய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். நீதிபதியின் அறிவுறுத்தல் படி இருவரது குற்றச்சாட்டு கைவிடப்பட்டது. இன்னுமொருவர் யூரிகளால் குற்றவாளியாகக் காணப்படாததால் விடுவிக்கப்பட்டார். நிர்மலராஜ், மயூரன் ஆகிய இருவரது வழக்கிலும் யூரிகளால் முடிவுக்கு வர முடியவில்லை.

சந்தேக நபர்களுக்கு எதிராக மீண்டும் வழக்குத் தொடுப்பது மக்கள் நலன் அடிப்படையில் பயனற்றது என அரசதரப்பு சட்டத்தரணி ஜொனதன் சேலி யூன் 17ல் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அவர்கள் குற்றவாளியாகக் காணப்படவில்லை என நீதிபதி போல் டோன்ஸ் தீர்ப்பு வழங்கினார். தனது தீர்ப்பில் இவ்விசாரணையை மேற்கொண்ட நோர்புளொக் பொலிஸ் புலனாய்வாளர்கள் மாண்டி வெப்ஸ்ரர், ரசல் வில்கின்சன் ஆகிய இருவரையும் நீதிபதி விமர்சித்தார்.


**பின்னணி :**

யூலை 15 2001 ஞாயிற்றுக் கிழமை திருவிழா முடிந்து திரும்பிக் கொண்டிருக்கையில் 15 - 30 இளைஞர்கள் வாள், கத்தி, பொல்லு ஆகிய ஆயுதங்களுடன் தாக்குதலில் ஈடுபட்டனர் இத்தாக்குதலில் ஒருவர் உயிராபத்தான காயங்களுக்கு உள்ளானதாகவும் மற்றும் மூவர் சிறுகாயங்களுக்கும் உள்ளாகினர். இதனை அடுத்து பொலிஸார் வீதித் தடையைப் போட்டு உலங்கு வானூர்தியின் உதவியுடன் தேடுதலை நடத்தினர். அதன் போது மோப்ப நாய்கள் நால்வரை பொலிஸாருக்கு அடையாளம் காட்டியது. மேலும் வீடு திரும்பிக் கொண்டிருந்த பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஒளிப்பதிவு செய்யப்பட்டனர். இச்சம்பவம் மறுநாள் வெளியான தேசியப் பத்திரிகைகளிலும் இடம்பிடித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் இவ்விழாவிற்கு 5,000ற்கும் மேற்பட்ட பெரும்பாலும் கிறிஸ்தவ தமிழர்கள் சென்று வருகின்றனர். இவ்வாண்டும் பல்லாயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. சம்பவம் இடம்பெற்று இரண்டு ஆண்டுகளின் பின்னும் வன்முறையில் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் தண்டிக்கப்படவில்லை என்று வருத்தத்துடன் தெரிவிக்கிறார் ஹரோ பகுதியில் வாழும் அந்தோணிப்பிள்ளை யூட். குடும்பஸ்தரான இவர் மேலும் தெரிவிக்கையில் 'இந்த வருசம் பெடியளின்ரை அட்டகாசம் கூடிப்போச்சு. இவங்கள் என்னத்தைப் பண்ணுவாங்களோ' என்று மனவருத்தத்துடன் தெரிவித்தார்.

### மனநிலை பாதிக்கப்பட்ட ஆபத்தானவர் தப்பிவிட்டார்

## பொலிஸார் மக்களுக்கு எச்சரிக்கை



மனநிலை பாதிக்கப்பட்ட ஆபத்தானவராகக் கருதப்பட்ட ராஜ்குமார் (29) என்பவர் மிடில்செக்ஸ் மருத்துவமனையில் இருந்து தப்பி உள்ளார். அம் மருத்துவமனையின் மனநோயாளர் பிரிவான பார்க் றோயல் சென்ரரில் சிகிச்சை பெற்று வந்த ராஜ்குமார் ஏப்ரல் 26ம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். ஒருவரைத் தாக்கியது தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டு ஹரோ மஜிஸ்ரேட் முன்னிலையில் வந்தபோது இவரை பாதுகாப்பாக தடுத்து வைத்து சிகிச்சை வழங்க நிதவான் உத்தரவிட்டு இருந்தார்.

5 அடி 7 அங்குலம் உயரமுடைய மெலிந்த தோற்றமுடைய ராஜ்குமார் நேரான கறுப்புத் தலைமுடி உடையவர் என்றும் மண்ணிறக் கண்கள் உடையவர் என்று போலிஸார் தெரிவிக்கின்றனர். மேலும் வலது கன்னத்திலும் வலது புருவத்திலும் குறிப்பிடப்படும்படியான தளும்பும் இவருக்கு உண்டு. வழமையாக சவரம் செய்யாத இவர் மென்மையாகப் பேசும் சுபாவம் உடையவர் என்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர். இவர் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் டிசி பொப் செறிவ் ற்கு 0208733 5435 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் கொடுக்கலாம்.

இவருக்கு நெருங்கிய நண்பர்கள் யாரும் இல்லை என்றும் ஆனால் தெரிந்தவர்கள் வெம்பிளி, ஹரோ பகுதியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இவர் மற்றவர்களுக்கு ஆபத்தாக இருப்பதுடன் இவரும் சிகிச்சை பெற்றுவருவதால்
அச்சிகிச்சை தொடர்ச்சியாகக் கிடைக்காவிடில் அது அவருக்கும் ஆபத்தாகும் என மனநோய் மையப் பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

## தமிழ் சமூகத்தினர் பொலிஸாரைச் சந்தித்தனர்

தமிழர் தகவல் நடுவத் தலைவர் வரதகுமார், நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் ஆகியோர் கிழக்கு இலண்டன் பொலிஸ் அதிகாரிகளை யூன் 11ல் சந்தித்து உள்ளனர். பொறஸ்ற்கேற் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சீனியர் சுப்பிரின்டன்ட் இயன் டிக்சன், நியூஹாம் பொலிஸ் அதிகாரி ஜோன் சவேச் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு இலண்டனில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வன்செயல்கள் பற்றியும் அதனைக் கட்டுப்படுத்துவது பற்றியதுமாக இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் கடந்த உதயன் பத்திரிகையில் கேட்கப்பட்ட தமிழ் ஹொட் லைனின் அவசியம் பற்றி கவுன்சிலர் போல் மீண்டும் பொலிஸாருக்கு எடுத்துக் கூறி உள்ளார்.



**தமிழர் தகவல் நடுவத் தலைவர் வரதகுமார்**

கனடாவில் வன்முறைக் குழுக்கள் கட்டுப்படுத்தப்பட்ட முறை, பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு ஆகிய விடயங்களும் அங்கு பேசப்பட்டு உள்ளது. விரைவாக பொலிஸார் மக்களிடம் வருவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டு உள்ளதாக கவுன்சிலர் போல் உதயனுக்குத் தெரிவித்தார். வன்முறையும் குடிவரவும் தொடர்பு படுத்தப்பட வேண்டும் அதாவது வன்முறையாளர்கள் பிரித்தானியாவில் வாழ அனுமதிக்கப்படக் கூடாது என்ற விடயத்தில் கவுன்சிலர் வெளிப்படையாகவே இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோஷ்டி மோதல், ஒருவரின் காது அறுந்தது

### கிழக்கு இலண்டனில் தொடரும் குழு மோதல்கள்

இல்போர்ட் ஹென்லி றோட்டில் இடம்பெற்ற தமிழ் இளைஞரின் கொலைக்குப் பின் யூன் மாதம் வோல்தம்ஸ்ரோ, இல்போர்ட் பகுதிகளில் வெவ்வேறு மோதல்கள் இடம்பெற்று உள்ளது. ஒரு சம்பவத்தில் வோல்தம்ஸ்ரோ கோஸ்டியும் ஈஸ்ற்ஹாம் கோஸ்டியும் லொய்ட்ஸ் பார்க்கில் மோதிக் கொண்டுள்ளனர். இச்சம்பவத்தில் கூரிய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் குறைந்தது ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. ஒருவரது காது அறுக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல் தெரிவிக்கின்றது. சிலருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டு உள்ளது. மற்றுமொரு சம்பவம் வோல்தம்ஸ்ரோவில் உள்ள பாமேர்சன் வீதியில் இடம்பெற்று உள்ளது.

## மினி ஸ்டார் நைற் ஆன மெகா ஸ்டார் நைற்

மே 31ல் இடம்பெற்ற மெகா ஸ்டார் நைற்றில் விளம்பரத்தில் அறிவிக்கப்பட்ட முக்கிய நடிகர் நடிகைகளான சிம்ரான், சினேகா, சிறிகாந் ஆகியவர்கள் கலந்து கொள்ளவில்லை. இதற்கு முன்னர் இடம்பெற்ற இப்படியான நிகழ்ச்சிகளிலும் முக்கிய நடிகர் நடிகைகள் கலந்து கொள்ளாமல் இருந்தனர். ஏட்டிக்குப் போட்டியாக தமிழ்த் தொலைக்காட்சிகள் சினிமாவையும் நட்சத்திரங்களின் நிகழ்ச்சிகளையும் மட்டுமே பெருமளவில் காட்டுவதால் நட்சத்திரங்களின் நிகழ்ச்சிகளில் மக்கள் கசப்படைந்து வருகின்றனர். மேலும் இந்நிகழ்ச்சிக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டதால் நிகழ்ச்சியில் குழப்பங்கள், கலகங்கள் ஏற்படுத்தப்படலாம் என்பதால் பலர் நிகழ்ச்சிக்கு செல்லத் தயக்கம் காட்டினர்.

விஜயகாந்த் தலைமையில் வந்த நடிகர் குழு டுபாயில் முழுமையாகக் கலந்து கொண்டதாகவும் சிலர் அப்படியே டுபாயில் இருந்து இந்தியாவிற்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. டுபாயில் நடந்த நிகழ்ச்சியில் 15,000 வரையான மக்கள் கலந்து கொண்டதாகவும் இலண்டன் அரினா 10,000க்கும் மேற்பட்ட இருக்கைகளைக் கொண்டிருந்த போதும் மூவாயிரத்துக்கும் குறைவான மக்களே கலந்து கொண்டதாக தெரியவருகிறது. அதிலும் பல நூறு ரிக்கற்றுக்கள் இலவசமாக வழங்கப்பட்டு உள்ளது.

ரசிகர்கள் பெருமளவில் கலந்து கொள்ளாததால் நிகழ்ச்சிகளும் சோபையிழந்ததாக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரசிகர் மயூரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தான் வழமையாக நட்சத்திர இரவுகளைத் தவறவிடுவதில்லை என்றும் ஆனால் மண்டப்தில் கூட நிகழ்ச்சிகளை திரையில் தான் பார்க்க வேண்டி இருப்பதால் இனிமேல் இப்படியான நிகழ்ச்சிக்கு வர பெரிதாக ஆர்வம் இல்லை என்று குறிப்பிட்டார்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்

வடக்கு இலண்டனில் கடந்த 4 ஆண்டுகளாக இயங்கி வரும் ரிபிசி வானொலி யூன் மாதம் தனது நான்காவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சற்லைற் (கொட்பேட்) இணைப்பு மூலமாக தமது ஒலிபரப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். இலண்டனில் வேறும் சில வானொலிகள் இயங்கிய போதும் இலங்கை அரசியலில் பல்வேறுபட்ட கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கான களம் என்ற வகையில் ரிபிசி வானொலி தனக்கென ஒரு தனித்துவத்தைப் பெற்று உள்ளது.

இவ் வானொலியின் நான்காவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் விடியோ மகசின் (Video Magazine) ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டு உள்ளது. பொழுது போக்கு நிகழ்ச்சிகள்



ரிபிசி நிர்வாக முகாமையாளர் ராம்ராஜ்

முதல் அரசியல் விவாதங்கள் வரை மக்களுடன் இணைந்து அவர்களது உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் நேரடி ஒலிபரப்புகள் மூலம் வானொலி கேட்போரையும் பங்குபற்ற வைக்கும் நிகழ்ச்சிகள் வானொலி ஆர்வலர்கள் மத்தியில் வரவேற்கப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக கருத்துச் சுதந்திரத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வகையில் மனித உரிமை மீறல்களுக்கும் ஏனைய உரிமை மீறல்களுக்கும் எதிராக இவ்வானொலி குரல்கொடுத்து வருவது தமிழ் சமூகத்தின் எதிர்காலத்திற்கு மிகவும் அவசியமானதாக அவ்வானொலி நேயர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வானொலியை ஆரம்பித்து கடந்த 4 ஆண்டுகளாக பல சிரமங்களின் மத்தியிலும் தொடர்ந்தும் வெற்றிகரமாக நடத்தி வருகிறார் நிர்வாக இயக்குனர் ராம்ராஜ். இதன் வெற்றிக்கு பிரதிபலன் எதிர்பாராது கலைப் பணி செய்து வரும் வானொலிக் கலைஞர்களுக்கும் அரசியல் ஆய்வாளர்களுக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

## இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதானமே தீர்வு

# இலண்டன் மாநாட்டில் ஏகமனதான தீர்மானம்

ஜனநாயக ஒன்றியம் யூன் 28, 29ல் 'இலங்கை ஜனநாயகம்' என்ற கலந்துரையாடலை நடாத்தி தீர்மானங்கள் சிலவற்றை ஏகமனதாக நிறைவேற்றி உள்ளது. இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான சமாதானத் தீர்வை வலியுறுத்தும் அத்தீர்மானம் நிரந்தரத் தீர்வு அவசியம் என்றும் அந்த இலக்கை நோக்கி நகர்வதற்கு படிப்படியாக முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கிறது.

இரு நாட்கள் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் கனடா, அமெரிக்கா, ஜேர்மனி, நெதர்லாந்து பெல்ஜியம் ஆகிய நாடுகளில் இருந்து வந்த சமாதான ஆர்வலர்கள் பலர் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

சமஸ்டி அமைப்பும் சிறுபான்மையினரின் உரிமைகளும் என்ற தலைப்பில் காலையில் இடம்பெற்ற அமர்விற்கு ரி சோதிலிங்கம் தலைமை தாங்கினார். சுசீந்திரன் (சம்ஸ்டித்தத்துவ ஆய்வாளர்) - சமஸ்டித் தத்துவம் சிறுபான்மையினருக்கான தீர்வு, கிரிஸ்ரீனா கமகா (சட்ட நிபுணர்) - சம்ஸ்டித் தத்துவம் பெல்ஜிய அனுபவம், பி எ காதர் (அரசியல் ஆய்வாளர்) - மலையக மக்கள் உரிமைகளும் சமஸ்டி அமைப்பும், பசீர் (சட்ட நிபுணர்) - முஸ்லீம் மக்களின் உரிமைகளும் சமஸ்டி அமைப்பும் என்ற ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

சமாதானமும் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகமும் என்ற தலைப்பில் மாலை அமர்வு உப்பாலி குரே தலைமையில் இடம்பெற்றது. அவ்வமர்வில் தற்கால நிலையும் இடைக்கால நிர்வாகமும் பற்றி தமிழ் ரைம்ஸ் ஆசிரியர் இராஜநாயகம் பேசினார். பொருளாதாரமும் சமூக நீதியும் பற்றி லைன்ஸ் இணையச் சஞ்சிகை ஆசிரியர் அகிலன் உரையாற்றினார்.

மறுநாள் மாற்று ஊடகங்களும் இலக்கியமும் என்ற தலைப்பில் கலந்துரையாடல் உபாலி குரேயின் தலைமையில் இடம்பெற்றது. வி சிவலிங்கம், சபேசன் ஆகியோர் ஊடகங்களின் நிலை பற்றி தமது கட்டுரைகளை சமர்ப்பித்தனர். நிகழ்ச்சி முடிவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சில வேலைத் திட்டங்களும் முன்மொழியப்பட்டது. இறுதியாக துப்பாக்கியின் நிழலில், Twisted Things ஆகிய இரு நாடகங்கள் இடம்பெற்றது.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

ஒஸ்லோவில் இலங்கை அரசும் புலிகளும் ஏற்றுக் கொண்ட சமஸ்டி முறையிலான சமாதானத் தீர்வை உருவாக்க இருதரப்பும் முழுமையாக ஈடுபட வேண்டும் என்றும் அதனை மக்கள் முன் வைத்து கலந்துரையாட வேண்டும் என்பதும் முதலானதும் முக்கியமானதுமான தீர்மானமாக அமைந்தது. மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் இதுவரை அனைத்துத் தரப்பினராலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் பதிவு செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் சகல சிறுபான்மையினரின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அத்தீர்மானம் கேட்டுக் கொண்டு உள்ளது. மேலும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அனைத்துக் கட்சிகளின் ஒத்தழைப்பையும் அத்தீர்மானம் கேட்டு உள்ளது.

# மலேசிய நாட்டில் பெரிய தமிழ்ப் பாடசாலை திறப்பு

மே 31 அன்று நாட்டிலேயே பெரிய தமிழ்ப் பாடசாலை ஒன்று மலேசியாவில் உள்ள குஆன்டன் பகுதியில் திறந்து வைக்கப்பட்டு உள்ளது. மலேசிய இந்தியன் காங்கிரஸ் தலைவர் டத்தோஸ்ரீ எஸ் சாமிவேலு இப்பள்ளியைத் திறந்து வைத்தார். இப்பாடசாலை இந்திரா மகோத்ரா தமிழ் பள்ளி என அழைக்கப்படுகிறது. மூன்று மாடிகளில் 24 வகுப்புகளைக் கொண்டு நவீன வசதிகளுடன் இப்பாடசாலை கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. இப்பாடசாலை 1,035 மாணவர்களுக்கு கல்வி வழங்கக் கூடியது.

# இரட்டைக் கொலைக்கு

## இருவர் மீது கொலைக் குற்றச்சாட்டு

பார்த்தீபன் குணசேகரம் (22), அபிரஞ்சன் தர்மகுலசிங்கம் (23), ஆகிய இருவரும் கிசோக்குமார் பாலசிங்கத்தை கடத்திச் சென்று கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு உள்ளனர். (பார்க்க : மற்றுமொரு இரட்டைக் கொலை) இவர்கள் வேலையற்றவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் குற்றம் சாட்டப்பட்ட இருவரும் ஜெடி உமாபதி என்பவரையும் கடத்திச் சென்று உள்ளனர். ஆனால் அதிஸ்டவசமாக உமாபதி தப்பிவிட்டார். உமாபதியை கடத்தியது தொடர்பாக திலீபன் ஆனந்தக்குமாரசாமி (23) என்பவரும் குற்றம் சாட்டப்பட்டு உள்ளார். திலீபன் ஆனந்தக்குமாரசாமி கடையில் வேலை செய்து வந்துள்ளார். இம்மூவரும் பார்க்கிங்சைட் கை றோட்டில் வசித்து வந்துள்ளனர். இவர்கள் மூவரும் றெட்பிறிஜ் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் யூலை 3ல் ஆஜர் செய்யப்பட்டனர்.

இல்போர்ட்டில் கிசோக்குமார் பாலசிங்கம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதும், அதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகக் பாம் பீச் உணவகத்திற்கு முன் பார்த்தீபன் பாலசிங்கம் கொலை செய்யப்பட்டதற்கும் தொடர்பு இருப்பதாகவே ஸ்கொட்லண்ட் யாட் நம்பியிருந்தது. அந்த வகையில் மேல் குற்றம்சாட்டப்பட்டவர்கள் பார்த்தீபன் பாலசிங்கத்தின் கொலையிலும் குற்றம் சாட்டப்படலாம் என தன்னை வெளிப்படுத்த விரும்பாத அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

### 15 பேர் கைது :

யூன் 30 பார்த்தீபன் பாலசிங்கம், கிசோக்குமார் பாலச்சந்திரன் ஆகியோரின் கொலைகளை விசாரித்து வரும் விசாரணைப் பிரிவினர் இல்போர்ட், பார்க்கிங்சைட் ஆகிய பகுதிகளில் உள்ள இரு வீடுகளை முற்றுகையிட்ட 15 தமிழ் இளைஞர்களை கைது செய்தனர். தமிழ் இளைஞர் கோஸ்டி ஒன்றுக்கு எதிராக கிழக்கு இலண்டனில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரும் பொலிஸ் நடவடிக்கையாக இது அமைந்து உள்ளது. இவ்விரு வீடுகளில் இருந்தும் பல்வேறு வகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டு உள்ளது. இவ்வாயுதங்கள் குற்றவியல் ஆய்வுகூடத்திற்கு பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு உள்ளது.

யூன் 30 திங்கட்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு ஸ்கொட்லன்ட் யாட் குற்றவியல் நிபுணர் குழு, ஆயுதப் பிரிவு - SO19 - இன் துணையுடன் இரு வீடுகளையும் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியது. சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் இருபதுக்களில் உள்ளவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவர்கள் வடக்கு கிழக்கு இலண்டனில் உள்ள 3 பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பார்க்கிங்சைட் ஹை றோட்டில் உள்ள மூவர் மீது கடத்தி தாக்கியதாகவும் இருவர் மீது கொலைக்குற்றமும் சுமத்தப்பட்டு உள்ளது.

# தமிழ் - பிரெஞ் பரிமாற்றம்

## தமிழக பேராசிரியர் கே மதனகோபாலன் பாரிஸ் வருகை

கடந்த 24-05-2003 சனிக்கிழமை பாரிசில் உள்ள செந்தெனிஸ் பல்கலைகழகத்தில் இரண்டாவது மொழிபெயர்ப்பு பட்டறை நடைபெற்றது. இதனை செந்தெனிஸ் பல்கலைகழகத்தின் சிறுபான்மை தேசியங்களின் மொழிகள் கலாச்சாரங்களுக்கான படிப்புத் துறையினர் ஒழுங்கு செய்திருந்தனர். பிரெஞ்சிலிருந்து தமிழிற்கும், தமிழிலிருந்து பிரெஞ்சுக்கும் மொழிபெயர்ப்பது பற்றிய இலக்கியப் பட்டறையாக இது அமைந்திருந்தது.

இம்மொழிபெயர்ப்பு பட்டறையின் மையப்பொருள்களாக 1.பனுவல்களின் தழுவல்கள், 2.மொழிபெயர்ப்பில் பண்பாட்டு நிலைமாற்றம், 3.மொழிபெயர்ப்பு என்பது மொழிப்பயிற்சியா இலக்கியமா?, 4..பிரெஞ் - தமிழ் நடையியல் ஒப்பீடு என்னும் தலைப்புகள் கொள்ளப்பட்டிருந்தன.

இந்த பட்டறையில் சிறப்பு அதிதியாக சென்னைப் பல்கலைகத்தின் பிரெஞ்மொழி பேராசிரியராக இருந்த கலாநிதி கே.மதனகோபாலன் அவர்கள் கலந்து கொண்டார். அத்துடன் இந் நிகழவில் சிறுபான்மை தேசியங்களிள் மொழி, பண்பாடு, ஆகியவற்றுக்கான பொறுப்பாளாராக விளங்கும் Michel Adnès அவர்கள் கலந்து சிறப்பித்தார். இப்பட்டறையை செந்தெனிஸ் பல்கலைகழகத்தின் மொழியியல் துறை பேராசிரியரான கலாநிதி அ.முருகையன் அவர்கள் முன்னின்று ஒழுங்குபடுத்தியதுடன் நிகழ்வையும் நெறிப்படுத்தினார்.

பேராசிரியர் கலாநிதி கே. மதனகோபாலன் கூட்டாக மொழி பெயர்ப்பு வேலைகளில் ஈடு பட்டிருந்தமை குறித்து விளக்கினார். அவ்வாறான கூட்டுழைப்பின் பலனாக உறங்காத உள் மனது, எனக்காக ஐந்து நிமிடங்கள், புத்தகக் கடைக்காரன், கொலைகாரன் கை என்கின்ற பிரெஞ்சுப் படைப்புகள் தமிழிற்கு வந்து சேர்ந்துள்ளன. சமகால தமிழக எழுத்தாளர்களுடைய படைப்புகளை தமிழிலிருந்து பிரஞ்சு மொழியில் "L'épreuve du feu " எனும் பெயரில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்.

செல்வி மீரா பாலகணேசன் அவர்கள் பிரஞ்சிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த 'La maison du poète' எனும் கவிதை நூலில் இருந்து சில கவிதைகளை வாசித்துக் காண்பித்தார். இப்பட்டறையில் பிரஞ்சு, தமிழ், சென்னை, பாண்டிச்சேரி, இலங்கை, மொரிஸ் நாட்டவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். இப்பட்டறை குறித்து கருத்து தெரிவித்த ஒழுங்கமைப்பாளர் முருகையன் இங்கு பிறந்து வளரும் தமிழ் சமூகத்தின் இளைய தலைமுறையினருக்கு இரு மொழி பரிமாற்றத்திற்கான பயிற்சியை அளிப்பதே இப்பட்டறையின் நோக்கம் எனத் தெரிவித்தார். அப்பால் தமிழ் இணையத் தளமும் இத்தொடரின் முதலாவது மொழிபெயர்ப்பு பட்டறை கடந்த ஆண்டு மே மாதம் 25ம் திகதியில் நடாத்தப்பட்டது.

ADVT.

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

M A S S I V E S A L E





M A S S I V E S A L E

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway, West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

## இறையருள் அரசி அன்னை காயத்ரி



உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பினி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்

**020 8952 7775**

வேதனைகள் தீர்க்க வல்லவள், குறைகளை போக்கிட வல்லவள் இறையருள் அரசி அன்னை காயத்ரி.

உங்களின் வரி விளம்பரங்களுக்கு
உதயன் **020 8952 5677**



The UDHAYAN
உதயன்
**ADVERTISE FOR BEST RESULTS**
**020 8952 5677**

## Apna Carpets &Furniture Ltd.

ACF
SUPPLIERS OF GOOD QUALITY CARPETS
Contract furniture for Councils, Landlords, Letting Agents and Hotels

For 3 Bedroom House:

- Carpets supplied and fitted — only **£540**inc.
- Furnished (3 Beds, 3 Wardrobes, 3 pc suite + Coffee table + Dining table with 4 chairs) **£999**inc.

For Limited period - Terms and Conditions apply

* Underlay FREE with over £5.99 Sq/yd Carpets

**FREE Metal Bed Frame (worth over £250) when you spend £1200**

**HURRY - OFFER ENDS SOON**

Call our showroom for more details
**Tel: 020 8998 5548**
78, Bilton Road, Perivale, Greenford, Middx. UB6 7DE

## BEST TRADE CENTRE

**Need a Car ?
Can't get finance ?
WE CAN HELP
No Deposit - Drive away
TODAY in
one of our great cars
NO Application Refused
CALL
020 8514 0988**
763 Romford Road, Manor Park E12
Email: info@besttradecentre.co.uk

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK

## Shiv Souvenirs Ltd

Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS gifts Souvenirs and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com




*Quality Floor at Competitive Price at*
**One Stop Flooring Ltd.**
190 Honeypot Lane
Stanmore
020 8204 2333

## Unique Jewellers

Dealers in
*22Ct Gold Jewellery, Diamond and White Gold always in Stock.*
020-8606 9768
020-8574 3636
79 Western Road, Southall, Middx. UB2 5HQ
London

**RehncyShaheen**
Chartered Accountants
www.rehncyshaheen.com

We are Rehncy Shaheen Chartered Accountants, with offices in Middlesex and South London and associates in Tanzania. Our team includes members of the Institute of Chartered Accountants in England & Wales, Chartered Association of Certified Accountants, and Chartered Institute of Taxation.

We provide partner-led accounting and business services formulated to meet the requirements of a wide range of clients. Our philosophy is a personal approach together with a prompt and dedicated attention to our clients' needs.

Our services include

**Auditing**
•
**Cashflow & Management Accounting**
•
**Client Accounting Services**
•
**Business Start-Up**
•
**Back Duty Investigation (Tax & VAT)**
•
**Taxation**

Almost every business decision has a taxation implication, some being short term, others having an effect many years hence. Our special tax department works closely with clients to help them through the maze, planning ahead so that the incidence of tax is minimised.

We are proud of our exceptional success rate in dealing with Back Duty Investigations (both Inland revenue and Customs & Excise) howsoever complicated or involved they may be.

For information:

Mr J S Rehncy MA FCA FCCA CTA AIIT MCMI ACIArb
Middlesex Offices
020 8864 9065 020 8813 8324

Mr A M Shaheen MA LLB ACEA MCMI
South London Office 020 7223 8221



## LONDON BUILDING SUPPLIES

**Tel: 020 8453 0880**



*Building Materials, Bricks, Blocks, Plaster, Cement, Sand, Aggregates, Concrete*

*Decorating Materials, Paints, Tools, Ladders, Doors, Windows, Key Cutting, Protective Clothes*

**Hard Landscaping Display for your IDEAS**

அனைவரையும் வரவேற்கின்றோம்

**Abbey Road, Park Royal NW10**

### சண்டியன் சின்னத் தம்பி - ஜேசுரட்ணத்திற்கு

# இலண்டனில் பாராட்டு விழா




ஜேசுரட்ணம்

ஈழவர் திரைக்கலைமன்றம் எஸ் ஜேசுரட்ணத்தை கௌரவித்து அவருக்கு பாராட்டு விழா ஒன்றை யூன் 8ல் பாம் பீச் உணவகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. அப்பாராட்டு விழாவிற்கு திரு திருமதி ஜேசுரட்ணம் தம்பதிகள் பாரிஸில் இருந்து வந்து கலந்து கொண்டனர். கலைப்பணிச் செல்வர், கலைமாமணி, விவசாய மன்னன், ஜனாதிபதி விருது என கலைப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்ற முகத்தார், கலைமுரசு, கலைபூபதி, கலைவேள் என அழைக்கப்படும் எஸ் ஜேசுரட்ணம் அவர்களுக்கு செல்வா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

சண்டியன் சின்னத்தம்பி, இலண்டன் மாப்பிளை, கோப்பாய் ரு டுபாய், புரோக்கர் பொன்னம்பலம், ....... என 20 வரையான நாடகங்களையும், வாடைக்காற்று, ஏமாளிகள் என 10 வரையான படங்களையும் நடித்து ஈழத்து நாடக வரலாற்றில் தனக்கென ஒரு முத்திரையைப் பெற்றுள்ளார் எஸ் ஜேசுரட்ணம். முதத்தார் வீடு நாடகத் தொடர் இலங்கை வானொலியில் 268 வாரங்கள் ஒலிபரப்பானது குறிப்பிடத்தக்கது. கதம்பம் (தனி நாடகங்கள்) 123 வாரமும், பருவக்காறு தொடர் நாடகம் 52 வாரமும் ஒலிபரப்பானது.

அங்கு அனைவரும் ஜேசுரட்ணத்தின் கலைப்பணியைப் பாராட்டிச் சென்றனர். தமிழர்கள் தம் கலைஞர்களைப் பற்றிய வரலாற்றை பத்திரப்படுத்தத் தவறி விட்டார்கள் என்று குறிப்பிட்டார் ஈழவர் திரைக்கலை மன்றத் தலைவர் ஜோசப். 1993ல் ஐரோப்பாவிற்கு புலம்பெயர்ந்த ஜேசுரட்ணம் தனது கலைப்பணியை தற்போது ஐரோப்பிய மண்ணில் தொடர்கிறார்.

# வடகிழக்கு மருத்துவக் குழுவின் இலண்டன் விஜயம்



மருத்துவர்கள் எஸ் குமாரவேற்பிள்ளை, அம்பலவாணர், ஜெயகுலராஜா, எஸ் பாலச்சந்திரன்

இலங்கயின் வடக்கு, கிழக்கு மாகாண மருத்துவக் குழு இலண்டன் வந்துள்ளது. வடகிழக்கு மாகாண சுகாதார சேவை இயக்குனர் டொக்டர் எஸ் குமாரவேற்பிள்ளை, முல்லைத்தீவு சுகாதார சேவைகள் இயக்குனர் டொக்டர் ஜெயகுலராஜா, யாழ் போதனா வைத்திய சாலை நிர்வாக இயக்குநர் டொக்டர் அம்பலவாணர் ஆகியோரே இலண்டன் வந்துள்ளனர். இவர்கள் கலந்து கொண்ட சுகாதார மாநாடு யூன் 7ல் குயின் எலிசபத் மருத்துவமனையில் இடம்பெற்றது. யாழ்பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சத்தியசீலனும் இம்மாநாட்டில் இணைந்து கொண்டார்.

இலங்கையில் திருமலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டாவது சர்வதேச மருத்துவ மாநாட்டிற்கு முன்னோடியாக இம்மாநாடு இலண்டனில் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. TIC, CHRD, MIOT & TRRO(USA) ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த மாநாட்டை ஒழுங்கு செய்தனர். இம்மாநாட்டிற்கு டொக்டர் எஸ் பாலச்சந்திரன் தலைமைதாங்கினார். சிதைந்து போயுள்ள வடக்கு கிழக்கின் சுகாதார சேவைகளை மேம்படுத்த புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவ வேண்டும் என்று அங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பிரித்தானியாவின் பல பாகங்களில் இருந்தும் 60க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

# படுகொலைகளுக்கு எதிராக தலைநகர் இலண்டனில் போராட்டம்

இலங்கையில் நடைபெறும் அரசியற் படுகொலைகளைக் கண்டித்து இலண்டனில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் முன்னால் குரல் எழுப்பப்பட்டது. யூன் 27ல் இடம்பெற்ற இப்போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகுந்த அக்கறையும் மாற்றுக் கருத்துக்களும் உடைய பலர் கலந்துகொண்டனர். அரசியற் படுகொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு போராட்டக்காரர்கள் கேட்டுக்கொண்டனர்.



கொலை செய்யப்பட்ட சுபத்திரன்

தம்பிராஜா சுபத்திரன் (46) யூன் 14ல் யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்டதை அடுத்தே அரசியற் படுகொலைகளை நிறுத்தக் கோரும் குரல்கள் ஓங்க ஆரம்பித்து உள்ளது. கரோவில் தளத்தைக் கொண்டு இயங்கும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - ரிபிசி வானொலியில் 18 யூன் அன்று அரசியற் படுகொலைகள நிறுத்தும் படி கோரும் விவாதம் இடம்பெற்றது. தற்போதைய சமாதானச் சூழலைப் பயன்படுத்தி ஈழத்தமிழ் சமூகத்திடையே ஜனநாயகத்தை வளம்படுத்த பலவகையிலும் முயற்சிக்கப்பட்டு வருகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்திலேயே தன்னை போராட்டத்தில் ஈடுபடுத்திய சுபத்திரன் சுட்டுக் கொல்லப்படும் வரை நேர்மையான போராளியாக இருந்ததை மாறுபட்ட அரசியல் நிலைப்பாடு உடையவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஈழ மாணவர் பொது மன்றத்துடன் (GUES) சுபத்திரனின் அரசியல் வாழ்வு ஆரம்பமானது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் தன்னை இணைத்துக் கொண்ட சுபத்திரன் இறுதிவரை அவ்வமைப்பிலேயே இருந்துள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்தில் கொல்லப்பட்ட முக்கிய அரசியல் தலைவராக சுபத்திரனின் படுகொலை அமைந்து உள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

### புலம்பெயர்ந்த கம்யூனிஸ்ட்டுக்களின் ஒன்றுகூடல்

# கொமினிஸ்ட் கார்த்திகேயன் நினைவுக் கருத்தரங்கு

22.06.2003 தோழர் கார்த்திகேசனின் நினைவுக் கருத்தரங்கு பாரிசில் இடம்பெற்றது. கம்யூனிஸ்ட் கார்திகேயன் என்று இலங்கையில் நன்கு அறியப்பட்ட இவர், பொது உடமைச் சிந்தனையாளரும், செயற்பாட்டாளருமாவார். இந்த நினைவுக் கருத்தரங்கை 'அசை' என்னும் சமூக அசைவியக்கதிற்கான விமர்சன ஆய்விதழும், தேசிய கலை இலக்கிய பேரவையும், உயிர் நிழல் சஞ்சிகையும் இணைந்து நடாத்தின.

சமூக அசைவியக்கதிற்கான கருத்தரங்குத் தொடரில் இது இரண்டாவது நிகழ்வாகும். முதலாவது கருத்தரங்குத் 2002ம் ஆண்டளவில் தலித்தியப் படைப்பிலக்கியத்தின் முன்னோடியும் இடது சாரி செயற்பாட்டாளருமான தோழர் டானியல் நினைவுக் கருத்தரங்காக நடைபெற்றது.

சாதிய எதிர்ப்பு போராட்டங்களில் முன் நின்றவரும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக போராடியவரும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுக்கும் விடிவிக்குமாக வாழ்ந்தவருமான தோழர் கார்த்திகேயனின் நினைவு கருத்தரங்கில் பல ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட உள்ளன.

சர்வதேச விடுதலை இயக்கத்தின் பல் வேறு கால கட்டங்களும், இலங்கையின் பிரத்தியேக நிலைமைகளும் எனும் தலைப்பில் பி.ஏ.காதர் உரையாற்றினார். உலகமயமாதலும் இலங்கைத் தேசிய இனச் சிக்கல்களும் எனும் தலைப்பில் வி.சிவலிங்கம் உரையாற்றினார். தோழர் கார்த்திகேசனும் இலங்கை பொதுவுடமை இயக்கமும் எனும் தலைப்பில் க.தணிகாசலம் உரையாற்றினார். சாதியத்திற்கு எதிரான போாட்டத்தில் தனது அனுபவங்கள் குறித்து த.தர்மகுலசிங்கம் உரையாற்றினார்.

# உடல் உறுப்புக்களின் சட்டவிரோத வியாபாரம்

உடல் உறுப்புக்களை வாங்குவதும் விற்பதும் பொதுவாக அனைத்து நாடுகளிலும் (ஈரான் போன்ற சில நாடுகளைத் தவிர) சட்ட விரோதமாகவே இருந்து வருகிறது. இருந்தாலும் உடல் உறுப்புகளுக்கான சர்வதேசச் சந்தை வளர்ந்து வருகிறது. அதற்கான கறுப்புச் சந்தையும் வளர்ந்து வருகிறது. மேற்கு நாடுகளில் உறுப்புக்களின் வர்த்தகம் தடை செய்யப்பட்டு இருப்பதால் அவர்கள் வறிய மூன்றாம் உலக நாடுகளை நோக்கி தம் கடையை விரித்துள்ளனர்.

அமெரிக்காவில் புளோறிடா மாநிலத்தில் இருந்து இயங்கும் International Transplant Foundation நிறுவனம் உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்கான சுற்றுலாவை ஒழுங்கு செய்கிறது. இச்சிகிச்சை சுற்றுலாவிற்கு £55,000 - £85,000 வரை கட்டணம் அறவிடப்படுகிறது. இப்பணத்தில் தனது உடல் உறுப்பை வழங்கும் வறுமைக் கோட்டில் வாழும் அந்த மனிதருக்கு £1,000 மட்டுமே வழங்கப்படுகிறது.

பிரித்தானியாவில் 5,500 நோயாளிகள் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர். ஆனால் கடந்த ஆண்டு 1,700 நோயாளிகளுக்கு மட்டுமே அவர்களது உறவினர்கள் உறுப்புகளைத் தானம் செய்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மற்றையவர்கள் வெளிநாடுகளை நோக்குகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு சென் மேரி மருத்துவ மனையின் மாற்றுச் சிகிச்சைப் பிரிவிற்கான தலைவர் பேராசிரியர் நாடி ஹக்கீம் உடல் உறுப்பு வர்த்தகம் சட்டமயமாக்கப்பட்டு அது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். அதுவே உறுப்புக்களுக்கான சுற்றுலாவையும் உறுப்புக்களுக்கான கறுப்புச் சந்தையையும் கையாள ஒரே வழி என அவர் நம்புகிறார். அவரது கருத்தை மருத்துவ சமூகம் முற்றாக நிராகரித்து உள்ளதுடன் அது மனிதத்துவத்திற்கு எதிரானது எனவும் அவர்கள் குறிப்பிட்டு உள்ளனர்.

இது வரை 15,000 சட்ட விரோதமான உறுப்பு மாற்றுச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு உறுப்பைத் தானம் செய்த 70 வீதமானவர்கள் நோய்வாய்ப்படுவதாகத் தெரிவிக்கிறது. வறிய மூன்றாம் உலக நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், துருக்கி, ஈராக் போன்ற நாடுகளில் சில ஆயிரங்களுக்காக அப்பாவி ஏழைகளையும் செல்வந்த நாடுகளைச் சேர்ந்த உறுப்புத் தேவைப்படும் செல்வந்தர்களையும் இணைக்கும் மருத்துவ வியாபாரிகள் கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றனர்.

# இஸ்லாமிய அச்சுறுத்தல்

இஸ்லாம் பற்றிய பீதியை பரப்புபவர்களை அம்பலப்படுத்தும் முயற்சி ஒன்றை இஸ்லாமிய மனித உரிமை ஆணைக்குழு அறிவித்து உள்ளது. இவ்வாறான பீதியைப் பரப்புபவர்களை பட்டியலிட்டு மக்கள் மூலம் அவர்கள் வரிசைப்படுத்தப்பட்டனர். வரிசைப்படுத்தப்பட்டவர்களுக்கு 2003 இஸ்லாமிய அச்சுறுத்தல் என்ற விருது வழங்கப்பட்டு உள்ளது. அதன்படி உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கெற்றும் பிரித்தானிய தேசியக் கட்சித் தலைவர் நிக் கிறிபினும் முதலாம் இடத்தில் உள்ளனர். இவ்வாண்டுக்கான இஸ்லாம் - அச்சுறுத்தல் விருது அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஸ்ஸிற்கு வழங்கப்பட்டு உள்ளது.

இவ்விருது வழங்குவதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் இனவாதிகளாக அம்பலப்படுத்தப்பட்டு உள்ளனர். உள்துறை அமைச்சரை இஸ்லாமியர்களுக்கு எதிரானவராக காட்ட முற்படுவது பற்றி பிளங்கெற் விசனமடைந்திருப்பதாக உள்துறை அமைச்சுப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# மற்றுமொரு இரட்டைக் கொலை!

# இல்போர்ட் தமிழ் இளைஞர் கைது.

ஸ்ரான்மோர் பகுதியைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் வடக்கு இலண்டனிலும் கிழக்கு இலண்டனிலும் ஒரு மணிநேர வித்தியாசத்தில் கொல்லப்பட்டு உள்ளனர். இலண்டன் வடக்கில் வெம்பிளி வடக்கு, ஈலிங் றோட்டில் ஒருவர் கொல்லப்பட்டு உள்ளார். இச்சம்பவம் இடம்பெற்று ஒரு மணி நேரத்தில் கிழக்கு இலண்டன் இல்போர்ட்டில் இடம்பெற்ற மற்றுமொரு தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு உள்ளார். இவ்விரு கொலைகள் தொடர்பாகவும் இல்போர்ட் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் யூன் 19 காலை கைது செய்யப்பட்டு உள்ளார். இவர் இல்போர்ட் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். ஏறக்குறைய 25 வயதுடைய இந்த இளைஞர் இவ்விரு கொலைகளிலும் சம்பந்தப்பட்டிருப்பதாக நியூ ஸ்கொட்லண்ட் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது. யூன் 6ல் கொலையாளி செந்தமிழ் தில்லைநாதன் இரட்டைக் கொலை செய்ததாக நீதிமன்றம் முடிவு செய்து இரு தினங்களுக்குள் மற்றுமொரு இரட்டைக் கொலை இடம்பெற்று உள்ளது.

பார்த்தீபன் பாலசிங்கம் (23) என்ற இளைஞன் வெம்பிளியில் பாம் பீச் றெஸ்ரோறன்ருக்கு முன் வைத்து அடித்துக் கொல்லப்பட்டு உள்ளார். இச்சம்பவம் இடம்பெற்று ஒரு மணிநேரத்தின் பின் கிசோக்குமார் பாலச்சந்திரன் (18) என்ற இளைஞர் கிழக்கு இலண்டன் வொன்ஸ்ரட் பகுதியில் உள்ள றொடிங் ஆற்றில் வீசப்பட்டு உள்ளார். 10 மணி நேரத்திற்குப் பின் அவர் கண்டுபிடிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் மருத்துவமனையில் மரணமானார்.

இவ்விரு கொலைகளும் ஸ்கொட்லண்ட் யாட்டின் Specialist Crime Directorate West இனால் புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது. இந்த இரு கொலைத் தாக்குதல்களிலும் ஒரே குழுவே ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக புலனாய்வுத் தலைமை அதிகாரி கொலின் சட்டன் தெரிவிக்கிறார். கிழக்கு இலண்டனில் கிசோக்குமாரைத் தாக்கிவிட்டு ஒரு மணிநேரத்தில் மேற்கு இலண்டன் சென்று பார்த்தீபனைத் தாக்குவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் விசாரணையை மேற்கொண்டுள்ள அதிகாரி சட்டன் தெரிவித்தார். மேலும் இரு தாக்குதல்களிலும் நேரில் கண்ட சாட்சியங்கள் வழங்கிய அடையாளங்கள் ஒத்தவையாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் இரு சம்பவங்களின் போதும் ஒரே காரே பயன்படுத்தப்பட்டு உள்ளது. இத்தாக்குதல் தொடர்பான விசாரணை மிகவும் துரிதமாக முன்னேறி வருவதாக பிராங் எனும் மற்றுமொரு அதிகாரி உதயன் நிருபருக்குத் தெரிவித்தார்.



ஆற்றில் வீசப்பட்ட கிசோகுமார்



ஈலிங்கில் கொல்லப்பட்ட பார்த்தீபன்

கொலை செய்யப்பட்ட இரு இளைஞர்களதும் குடும்பத்தினர் இலங்கையில் இருந்து இலண்டன் வந்துள்ளனர். இவ்விசாரணை தொடர்பாக தமிழ் மக்களிடம் இருந்து சாதகமான பிரதிபலிப்பு ஏற்பட்டு உள்ளதாகக் குறிப்பிட்ட பேச்சாளர் கொலை தொடர்பான தகவல்களை கொண்டிருப்பவர்களுடன் பொலிஸார் பேசத் தீவிரமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

**வெட்டியும் கொத்தியும் நரவேட்டை**

யூன் 8 அதிகாலை ஒரு மணியளவில் வெம்பிளி ஈலிங் றோட்டில் பாம்பீச் றெஸ்ரோறன்றிற்கு முன்பாக வைத்து பார்த்தீபன் பாலசிங்கம் (23) என்ற இளைஞர் கோடரி, வாள் ஆகிய ஆயுதங்களால் கொத்தியும், வெட்டியும் தாக்கப்பட்டார். தலையில் பல தடவை தாக்கப்பட்டதால் மண்டையோடு பிளவுபட்டு கழுத்திலும் பலத்த காயங்களுடன் கரோவில் உள்ள நோர்விச் பார்க் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மத்திய இலண்டனில் உள்ள தேசிய நரம்பியல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கு யூன் 16 அன்று மரணமானார்.

றொடிங் ஆற்றில் மரணத்தின் பிடியில் தமிழ் வாலிபர்

கிசோக்குமார் பாலச்சந்திரன் (18) என்ற இளைஞர் றொடிங் ஆற்றில் அரை மயக்கநிலையில் கிடந்ததை அப்பகுதியால் தன் நாயுடன் நடந்து சென்ற ஒருவர் கண்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். அதிர்ச்சியுடனும் அரை மயக்கத்திலும் கிடந்த கிசோக்குமார் தேசிய நரம்பியல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். முகம், கழுத்து, தோள்மூட்டு, வயிறு என உடலின் பலபாகங்களிலும் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னரேயே றொடிங் ஆற்றில் கிசோக்குமார் வீசப்பட்டு உள்ளார். பின்னர் யூன் 13 அன்று மரணமானார்.

**பின்னணி :**

அதிகாலை ஒரு மணியளவில் ஈலிங்றோட்டில் பார்த்தீபன் பாலசிங்கத்தை ஈவிரக்கமின்றி மிருகத்தனமாகத் தாக்கியது ஐவர் கொண்ட குழு என ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்து உள்ளது. இத்தாக்குதலை நடத்தியவர்கள் குறைந்தது மூன்று கார்களில் நோர்த் சேக்குலர் வீதியால் கிழக்கு நோக்கி இல்போர்டிற்கு வந்து உள்ளனர். அந்த 3 கார்களில் ஒன்று silver Mitsubishi Shogun. இவர்கள் அதிகாலை 2 மணியளவில் இல்போர்ட் கை றோட்டில் உள்ள ஐகோன் பப்பில் ஆறுபேருடன் முரண்டுகொண்டனர். அதன் போது இருவர் காரில் வந்த கோஸ்டியால் கடத்தப்பட்டனர். அதில் ஒருவர் பச்சைநிற றோவர் காரில் ஏற்றப்பட்டார். சம்பவம் நடந்து ஒரு மணிநேரத்தின் பின் வீங்கிய முகத்துடனும் சிறுகாயங்களுடனும் இல்போர்ட் பொலிஸ் நிலையத்திற்கு வந்த ஒரு இளைஞர் தன்னை தாக்கிவிட்டார்கள் என்று முறையிட்டு உள்ளார்.

தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னர், தமிழ் இளைஞர் குழுக்களுக்கிடையே ஐக்கோன் பப்பில் மோதல் இடம்பெற்றது. இம்மோதலில் 20 வரையான தமிழ் இளைஞர்கள் ஈடுபட்டதாகவும் அதில் கொல்லப்பட்ட கிசோக்குமாரும் ஈடுபட்டதாக பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. இதன் பின்னர் மாலை கிசோக்குமார் ஐக்கோன் பப்பில் இருந்து கடத்தப்பட்டு உள்ளார். கடத்தப்பட்ட கிசோக்குமார் மோசமாகத் தாக்கப்பட்டு ஆற்றில் வீசப்பட்டு உள்ளார்.

தாக்கப்பட்ட இரு இளைஞர்களும் ஸ்ரானமோரைச் சேர்ந்தவர்கள், இருவரும் முதற்கட்ட தாக்குதலில் உயிர் தப்பி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒரே மருத்துவமனையில் மரணமடைந்தனர். தற்போது இருவரையும் கொலை செய்தது ஒரே குழுவென பொலிஸார் நம்புகின்றனர்.

# சட்டத்தின் ஓட்டையில் சத்தம்

# சுவாமிநாராயணன் ஆலய கட்டுமானம்

சுவாமி நாராயணன் ஆலயக் கட்டுமானத்தின் போது பெரும் சத்தம் அப்பகுதியில் ஏற்பட்டது என்று ஆலய அறக்கட்டளைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு வலுவிழந்தது. வாரக் கடைசித் தினங்களில் அறிவுறுத்தப்பட்ட எல்லைக்கும் மேலாக சத்தம் ஏற்பட்டதாகவும் மீண்டும் மீண்டும் வழங்கப்பட்ட எச்சரிக்கைகளை புறக்கணித்து கட்டுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சுற்றுச் சூழல் சுகாதார அலுவலர்கள் ஆலய அறக்கட்டளை நிர்வாகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தனர்.

இது தொடர்பாக அறக்கட்டளை நிர்வாகம் அப்பகுதி கவுன்சிலர்களுக்கு பல முறைப்பாடுகளை மேற்கொண்டது. முறைப்பாடுகள் காரணமாக இச்சட்ட நடவடிக்கை மீளாய்வு செய்யப்பட்டது. அதனை மீளாய்வு செய்த திருமதி மார்க்ஹாம் கட்டுமான வேலைகளைச் செய்தது தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் அல்லாதபடியாலும் மேலதிக முறைப்பாடுகள் குடியிருப்பாளர்களிடம் இருந்து வராததாலும் சட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை என்று தெரிவித்தார்.

தொழில் தேர்ச்சி இல்லாதவர்கள் வார இறுதிநாட்களில் இவ்வாறான வேலைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு உள்ளது. இந்த விதிமுறையின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு எச்சரிக்கை மட்டும் வழங்கப்பட்டது.

தற்போது சத்த அளவைக் குறைப்பதற்கான புதிய விதிமுறைகளை சுற்றுச் சூழல் சுகாதாரப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

UDHAYAN
HOT NEWS
CALL
020 8952
5677

MANAKTALA &CO.
Chartered Accounts
* Tax / VAT Return
* Accounts / Auditing
* Any needs for Accounts Purpose
Call Me
MR. PRADEEP MANAKTALA F.C.A, M.Sc.
on
Tel: 020 8579 7333
Fax: 020 8566 2028
Barclays Bank Chambers,
17 Leeland Mansions,
Leeland Road, West Ealing,
London W13 9HE

J K SHAH
Chartered Certified Accountants
& Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

K.M.S. Accountants
For FREE Consultation on
Self Assessment Returns,
CIS25 refunds,
Financial Accounts for
Limited Companies/
Sole Traders, Company Formation,
VAT, PAYE &
Book-keeping Services
Tel: 020 8503 3375
Email: kms_group@hotmail.com

BHANOT & CO.
Chartered Accountants
A COMPLETE RANGE OF SERVICES AT REASONABLE RATES
TAX
AUDIT
FINANCE
PENSIONS
MORTGAGES
BOOK-KEEPING
CASH-FLOWS
ACCOUNTS
PAYROLL
PLANS
VAT
020 8840 8844
Email: anil@bhanot.co.uk

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# பொலிஸில் சேர சிறுபான்மையினருக்கு அழைப்பு

சிறுபான்மை மக்களையும் காவல்துறையில் இணைக்கும் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டு உள்ளது. மெற்றோபொலிட்டன் பொலிஸ் ஸ்தாபனரீதியாக இனவாதம் கொண்டது என்ற குற்றச்சாட்டைக் களைந்து தனக்கு புது முகத்தைக் கொடுக்க அவர்கள் முற்பட்டு உள்ளனர். இலண்டனில் கடமையாற்றும் 28,000 பொலிஸ் அலுவலர்களில் 5 வீதமான 1,550 அலுவலர்கள் சிறுபான்மையினத்தவர்களாக உள்ளனர். அடுத்த சில ஆண்டுகளில் 35,000 ஆக உள்ள பொலிஸ் அலுவலர்களில் 8 வீதத்தினர் சிறுபான்மையினராக இருக்கும் என உள்துறை அமைச்சு தெரிவித்து உள்ளது. 2009ல் கால்பங்கினர் சிறுபான்மையின பொலிஸாராக இருக்க வேண்டும் எனவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த சவாலான இலக்கை அடைவதற்கான வழியை உள்துறை அமைச்சு தற்போது தூண்டிவிட்டு உள்ளது. இருந்தும் பொலிஸ் பிரிவினுள் உள்ள சிறுபான்மையின அலுவலர்கள் மீதான இனவாதப் போக்குகள் தொடர்ந்தும் இடையூறாகவே உள்ளது. இதனைத் தாண்டி பொலிஸார் சிறுபான்மையினரின் இதயங்களை வென்றெடுக்கும் கடுமையான பணியில் ஈடுபட வேண்டி இருக்கும்.

இலண்டனில் 117 வேறுபட்ட கலாச்சாரமும் சமூகமும் வாழ்கின்றனர். இந்த பரந்துபட்ட சமூகத்துக்கு சேவைசெய்யும் பொலிஸாரும் அந்த சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும் என்கிறார் Met's Positive Action Central Team யைச் சேர்ந்த மார்க் வீவர். இவ்வமைப்பு இலண்டனின் பல பகுதிகளிலும் தெருவோர ஆட்சேர்ப்பு முகாம்களை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் மெற்றோபொலிட்டன் பொலிஸாரின் வெவ்வேறு பிரிவுகளுக்கும் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களையும் உள்வாங்க அவர்கள் முயற்சிக்கின்றனர்.

# சேலையின் இரகசியம்

The Sarei என்ற புகைப்படப் புத்தகம் ஒன்று பேர்க் பதிப்பாளர்களால் வெளியிடப்பட உள்ளது. இலண்டன் பல்கலைக் கழகக் கல்லூரி University College London - UCL பேராசிரியர் டானியல் மில்லர் கலாநிதி முகுலிகா பனார்ஜி ஆகியோரின் 500 புகைப்படங்களைக் கொண்ட இப்புத்தகம் செப்ரம்பர் மாதம் வெளியிடப்பட உள்ளது. சேலை கட்டுவது ஒரு கலை என்பதை இப்புத்தகம் சர்வதேசத்திற்கும் எடுத்துக் காட்ட உள்ளது.

# இனவாதக் கொலைகள்

பெரும்பாலான பத்திரிகைகள் தஞ்சம் கோருவோருக்கு எதிராக இருப்பதாக Independent Race and Refugee News Network மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்து உள்ளது. மேலும் 1991 முதல் 25க்கும் மேற்பட்டவர்கள் இனவாதம் காரணமாக கொல்லப்பட்டு இருப்பதாகவும் அவ்வாய்வு தெரிவிக்கிறது. சசிதரன் என்ற இலங்கைத் தமிழர் ஒருவரும் இவ்வாறான இனப்படுகொலைக்கு பலியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மனித இனம் புதிய விளக்கம்

பாரிய அழிவிற்குப் பின் தப்பிப்பிழைத்த சிறு தொகுதி மக்கள் கூட்டத்தில் இருந்தே இன்று வாழும் 6 பில்லியன் மக்களும் தோன்றியதாக பரம்பரையியல் நிபுணர் மார்க் பெல்ட்மனின் ஆய்வு தெரிவிக்கிறது. 6 பில்லியன் மக்களும் ஏறத்தாள ஒரே வகையான உயிரியல் கூறை (DNA) கொண்டிருப்பதற்கான காரணத்தை ஆய்வு செய்த போதே இந்த முடிவுக்கு அந்நிபுணர் வந்து உள்ளார். விலங்குகளில் மாறுபட்ட உயிரியல் கூறுகளும் அவற்றுள் உப இனங்களும் உண்டு. ஆனால் மனித குலத்தில் அவ்வாறு இல்லை.

இற்றைக்கு 70,000 ஆண்டுகளுக்கு முன்னர் பட்டினி, நோய் ஆகிய காரணிகளால் ஏற்பட்டதாகக் கருதப்படும் பாரிய அழிவில் மனித இனமே அழியும் நிலை ஏற்பட்டதாகவும் அதில் ஒரு சிறு தொகுதி மக்களே தப்பிப்பிழைத்ததாகவும் அவ்வாய்வு தெரிவிக்கிறது. அப்படித் தப்பிப் பிழைத்தவர்கள் 2000 பேர் வரையானவர்களே என்றும் மதிப்பிடப்படுகிறது.

# சிறார்களுக்கு வழங்காதீர்கள்

18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மன உளைச்சலுக்கான மிகவும் பிரபல்யமான Seroxat மாத்திரையை வழங்க வேண்டாம் என மருத்துவர்கள் அரசாங்க நிபுணர்களால் அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். இவ்வகை மாத்திரை வழங்கப்பட்டவர்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட 9 ஆய்வில் Seroxat உள்ளெடுப்பவர்களில் தங்களைத் தாங்களே துன்புறுத்தும் அல்லது தற்கொலை செய்யும் தூண்டுதல் ஏற்படும் வீதம் மூன்று மடங்கு அதிகமாக இருப்பதாகத் தெரியவந்து உள்ளது.

இம்மாத்திரையை 18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு வழங்க பிரித்தானியாவில் மறுக்கப்பட்டு இருந்த போதும் சில மருத்துவர்கள் மன உளைச்சலுக்கு இம் மாத்திரையை எழுதிக் கொடுப்பதாக தெரிவிக்கப்படுகிறது. 18 வயதிற்குக் குறைந்த 7,000 - 8,000 நோயாளிகளுக்கு இம்மாத்திரை வழங்கப்பட்டு உள்ளதாகக் கணிக்கப்படுகிறது. இவ்வாறான மாத்திரைகளை உட்கொள்பவர்கள் திடீரென அவற்றை நிறுத்தக் கூடாது என மருத்துவ சுகாதார பொருட்களை கண்காணிக்கும் Medicines & Healthcare Products Regulatory Agency அமைப்பு அறிவுறுத்தி உள்ளது.

# 3 குழந்தைகளின் மரணம் கொலையல்ல

## ஆசியரான தாய் நிரபராதி

மூன்று மாதம் ஆக முன்னரேயே தன் மூன்று குழந்தைகளையும் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட திருமதி திருப்ரி பட்டேல் (35) யூன் 11ல் நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டார். பிறந்து மூன்று மாதம் ஆகாத தன் குழந்தைகளின் மார்பை அழுத்தி அல்லது அக்குழந்தைகளை முச்செடுக்க முடியாமல் செய்து கொலை செய்ததாக அரசு தரப்பு மருந்தாளரான திருப்ரி பட்டேல் மீது கொலைக் குற்றம் சுமத்தியது. அரச தரப்பின் இந்த வாதத்தை முறியடிக்க இந்தியாவில் வாழ்ந்த திருப்ரி பட்டேலின் 80 வயதான அம்மம்மா வரவழைக்கப்பட்டார். அவரது 12 பிள்ளைகளில் ஐவர் குழந்தைப் பிராயத்திலேயே இறந்தமை திருப்ரி பட்டேலிற்கு முக்கிய சாட்சியாக அமைந்து அவரை நிரபராதி ஆக்கியது.

ஓராண்டுக்கும் மேலாக கொலைக் குற்றம்சாட்டப்பட்ட திருப்ரி பட்டேலின் வாழும் ஒரே குழந்தையிடம் இருந்தும் அவர் பிரிக்கப்பட்டார். ஆரம்பத்தில் அக்குழந்தையையும் இவர் கொல்ல முற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு பின்னர் அக்குற்றச்சாட்டு கைவிடப்பட்டது. சமூகப் பாதுகாப்புப் பணியாளர்கள் திருப்ரி பட்டேலால் குழந்தைக்கு ஆபத்து எனக் குற்றம்சாட்டி தாயையும் சேயையும் பிரித்தனர். வாரத்தில் ஒரு தடவை சமுகப் பாதுபாப்பு அலுவலர்களின் கண்காணிப்புடனேயே திருப்ரி பட்டேல் தன் குழந்தையை



நிரபராதி ஆன மகிழ்ச்சியில் திருப்ரி பட்டேலும் அவர் கணவரும்

பார்க்க அனுமதிக்கப்பட்டார்.

அரச தரப்பு வைத்த குற்றச்சாட்டு ஆதரமற்றது என்றும் இவ்வழக்கு தொடுக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை என்றும் இந்த வழக்கால் ஏற்பட்ட சொல்லணாத் துயரத்தை அத்தாயார் வெளிப்படுத்தினார். பிரிட்டிஸ் ரெலிகொம்மில் வர்த்தக ஆய்வாளராக இருக்கும் கணவர் ஜயன்ற் பட்டேல் தன் மனைவிக்கு வழக்குக் காலம் முழுவதும் துணையாக இருந்தார்.

### தொட்டில் மரணம்

குழந்தை பிறந்த ஆறு மாதங்களுக்குள் ஏற்படும் திடீர் மரணம் Cot Death - தொட்டில் மரணம்
என்று அழைக்கப்படுகிறது.

ஆயிரத்தில் ஒரு குழந்தைக்கு இவ்வாறு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இந்த திடீர் மரணத்திற்கான காரணமோ அதனை தடுப்பதற்கான வழிமுறைகளோ மருத்துவ உலகிற்கு சவாலாகவே உள்ளது. திருமதி திருப்ரி பட்டேலுடைய வழக்கில் அவருடைய 3 குழந்தைகளுக்கு ஏற்பட்ட திடீர் மரணத்திற்கு பரம்பரையியல் குறைபாடே காரணம் என்ற அவருடைய சட்டத்தரணிகளின் வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சில நிபுணர்கள் Long QT syndrome எனப்படும் பரம்பரையியல் குறைபாடு காரணமாக குழந்தைகளின் இதயம் குருதி அழுத்தத்தை வழங்காததால் மரணம் சம்பவிப்பதாக கருதுகின்றனர்.

திருப்ரி பட்டேலின் வழக்கில் ஏற்பட்ட வெற்றி அவரைப் போன்று ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை இழந்து குற்றம் சுமத்தப்பட்ட தண்டனை அனுபவிக்கும் சில தாய்மாருக்கு உதவும் என நம்பப்படுகிறது. NSPCC என்ற சிறுவர் அமைப்பு குழந்தை மரணங்கள் நிபுணர் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு ஆராயப்பட வேண்டும் எனத் தெரிவித்து உள்ளது.

Graphical Impact
Signs~Designs~Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

To Know your Birth Star contact 020 8905 7775, 020 8952 5677

DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING LTD.
FACTORY PRICES WHY PAY MORE?
MANUFACTURERS & INSTALLERS OF:
ALUMINIUM • HARDWOOD • RESIDENTIAL DOORS
PORCHES • PATIOS • UPVC
All Work Guaranteed For 10 Yrs
All Work Carried Out By Our Own Qualified Craftsmen
Retail & Trade Welcome All Double Glazing Repair Work Undertaken
Tel: 020 8514 0819 Fax: 020 8514 2333
Showroom: 844 Romford Rd, E12

# தென் ஆசியர்களின் சுகாதாரம்

மருத்துவ ஆய்வுகளில் தென்னாசியர்கள் மிகவும் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட்டு உள்ளதாக யூன் முதல் வாரத்தில் பிரித்தானிய ஆய்வாளர்கள் வெளியிட்ட தகவல் தெரிவிக்கிறது. இது ஒரு வகை நிறுவனமயப்படுத்தப்பட்ட இனவாதம் என இதனை வெளியிட்ட ஆசிரியர்களில் ஒருவர் குறிப்பிட்டு உள்ளார். லீட்ஸ் பல்கலைக்கழக ஆரம்ப சுகாதார ஆய்வு மையத்தைச் சேர்ந்த மஹ்வாஸ் குசைன் கம்பிள்ஸ் உம் சக ஆய்வாளர்களுமே இந்தத் தகவலை வெளியிட்டு உள்ளனர்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் ஆகிய தெற்காசிய நாட்டவர்கள் 0 - 1.7 வீதம் மட்டுமே மருத்துவ ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டு உள்ளனர். ஆனால் தெற்காசியர்கள் இதய நோய், நீரிழிவு போன்ற நோய்களால் மற்றைய இனத்தவர்களைக் காட்டிலும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## மேஷம்

கடந்த 7 1ற2 ஆண்டுகளாக ஏழரைச் சனியின் பிடியிலிருந்து, பல்வேறு துன்பங்கள் அனுபவித்து வந்தீர்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக, உங்கள் ராசிக்கு 3-லும், 4-லும் பெயர்ச்சியாகி வந்த குருபகவான் நற்பலன்களை வாரி வழங்க முடியாத நிலையில் இருந்தார். கூடவே, 2-ல் ராகு, 8-ல் கேது எனக் கிரக நிலைகள் அமைந்து, உடல், உள்ள நிலைகளில் உபத்திரங்களை வாரி வழங்கி வந்த அமைப்புகள் - துன்பம், துயரம், பணக்கஷ்டம் ஆகியவைகளை அனுபவிக்க வைத்தன. இதோ இப்பொழுது ஒரு இனிய பெயர்ச்சியை குருபகவான் உங்கள் ராசிக்கு ஐந்தாம் ராசியான சிம்மத்தில் தொடங்குகிறார். சிம்மக்குரு-உங்களுக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில், நினைத்த அத்தனை காரியங்களையும் நிறைவேற்றி வைக்கும் முகமாக - அதிர்ஷ்டம், ஆனந்தம், ஆரோக்யம் ஆகியவைகளை வழங்கும் விதமாகப் பெயர்ச்சியாகிறார். எதிர்பாராத தனவரவுகளுக்கு இடமுண்டு. பூர்வீக சொத்தில் ஏற்பட்டு வந்த இடையூறுகள், குழப்பங்கள் நீங்க வழி பிறக்கிறது. தந்தையார், பாக்கியம், தெய்வதரிசனம், குருமஹான்களின் ஆசி, கோவில், கும்பாபிஷேகம், தர்மகாரியப் பணிகள் ஆகியவைகளுக்கு மிகச் சிறந்த பொற்காலமாகப் பூப்பூக்கிறது சிம்மக்குருவின் சிங்காரப் பயணம்! தனது சப்தம பார்வையால் உங்கள் ராசிக்கு 11-ம் இடமான லாப ஸ்தானத்தை குருபார்வை செய்வது, தொழில் மூலம் நிகரற்ற லாப மேன்மைகள் கிடைக்க சுலபமாக வாய்ப்புகள் உருவாகும். மூத்த சகோதர வழி உறவுகளால் உதவியும், மகிழ்ச்சியும் ஏற்பட வாய்ப்புண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் ராசியை குரு தனது பாக்கிய பார்வையால் நோக்கம் செய்வது பல்வேறு வகைகளில் நன்மைகள் தரப்போகிறது. உடல் ஆரோக்கியம், மனநிலையில் தெளிவு ஆகியவைகளைப் பெறுவதோடு, தியானம், உடற்பயிற்சிகளால் புதுப்பொலிவும் பெறப் போகிறீர்கள். 5.9.2003 தேதியில் ராகு, கேது பெயர்ச்சிக்குப் பிறகு இன்னும் பல நல்ல இனிய நிகழ்வுகளைக் காண வாய்ப்புள்ளது. தைரிய, வீர்ய, சகாய ஸ்தானத்தில் சனிபகவான் நின்று, உங்களது வியாபாரம், அரசியல், சினிமா, கலைத்துறை ஆகிய பெரும் முயற்சிகளில் எதிர்பாராத வெற்றி மகுடங்களைச் சூட்டிவிடப்போகிறார்.

## ரிஷபம்

உங்கள் ராசிக்கு மூன்றாமிடமான கடகத்தில் உச்சம்பெற்று கடந்த ஓராண்டு காலமாக, சில இடையூறுகளைக் கொடுத்துவந்த குருபகவான் இப்பொழுது நான்காம் இடமான சுகஸ்தானத்திற்கு அடியெடுத்து வைக்கிறார். பொதுவாக ஸ்தானபலம் விஷேசமாக இல்லையென்றாலும், பார்வை பலத்தால் பல நன்மைகளை நீங்கள் பெறமுடியும். உங்கள் ராசிக்கு எட்டாம் வீட்டை தனது 5-ம் பார்வையால் நோக்கும் குருபகவான், முதலில் ஆயுள் பலத்தைத் தருகிறார். சில பல தடைகளையும், தாமதங்களையும் சந்தித்து வந்த உங்களுக்கு அவைகள் எல்லாம் விலகப்போகின்றன. கோர்ட்டு, வழக்குகளில் புதிய திருப்பங்கள் ஏற்பட உள்ளன. பல நாட்களாக சிக்கலில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு மிக எளிதில் தீர்வுகளும் கிடைக்கப்போகின்றன. தொழில் ஸ்தானத்தை கடந்த ஆண்டுகளில் பாதித்த நிலைகள் மாறி, இந்த ஆண்டு புதிய செயல் வடிவங்கள் மகிழ்வைத் தருவதாக அமையப் போகின்றன. சில தடைபட்டு வந்த செயல்களை நடத்தி முடிக்கக் குருபார்வை துணை செய்கிறது. தூரதேசப் பிரயாணங்கள், சுபச் செலவுகள் உண்டாகி, அவைகளிலும் ஒருவகையான ஆனந்தத்தை நீங்கள் பெறும் அமைப்பு உண்டாகிறது. அயன, சயன, சுகபோகங்களில் மனநிறைவுகள் உண்டாகாமல் போகலாம். குடும்பத்துக்கு நாகரீகப் பொருட்களை வாங்குவது போன்ற சுபச்செலவுகள் உண்டாகக் கூடும்.

## மிதுனம்

உங்கள் ராசிக்கு மூன்றாமிடமான மறைவு ஸ்தானத்திற்கு குரு பெயர்ச்சியாகி விடுவதால், குரு மறைந்துவிட்டார் என்பதுடன், மறைந்த குரு எவ்விதமான நன்மைகளையும் செய்யமுடியாத சூழ்நிலை உண்டாகிறது. கடந்த ஆண்டுகளில் ஏழரைச் சனியின் விரயச்சனியில் இருந்தபோது, தன ஸ்தானத்தில் உச்சபலம் பெற்ற குருபகவான், அவ்வப்போது உங்களைப் பண நெருக்கடிகளிலிருந்து விடுவித்து வந்தார். ஆனால் தற்போதைய இடமாற்றம் சில இடையூறுகளையே உண்டாக்கும். இது பொதுவானது என்றாலும், நட்சத்திர பாதசார அடிப்படையில் மூன்று பிரிவுகளாக சிம்மக்குருவின் பலன்களைப் பார்க்கலாம். மகம் நட்சத்திரமான கேது நட்சத்திரத்தின் பாதசாரத்தில் செல்லுகிற 60 நாட்கள், சுப காரியத்தடை, எந்த வேலைகளும் பாதியில் நின்றுவிடுதல், மருத்துவச் செலவுகள், உடல் உபாதைகள், எதிர்ப்பு, வழக்கு விவகாரங்கள், துற்கரும செலவுகள் உண்டாகி வேதனைப்படுத்தும்.

## கடகம்

உங்களுக்கு ஏழரைச் சனி ஆரம்பித்துவிட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக குருபகவான் 12 எனும் விரயஸ்தானத்திலும், 'ராசி’ எனும் ஜென்மத்திலும் உலாவி வந்து சில கடுமையான சிரமங்களை வழங்கி வந்தார். ஆனால், இந்தக் குருபெயர்ச்சி, உங்களை மிகவும் உயர்த்திப் பார்க்கப்போகிறது. 'ஏழரைச்சனி’ பற்றிய பயம் உங்களுக்குத் தேவையில்லை! தனம், குடும்பம், வாக்கு ஸ்தானத்தில் 'நட்பு’ நிலையில் அமரும் குருபகவான் குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் யாவும் நடக்க வாய்ப்புகளை உண்டாக்குவார். உங்களது ஜெனனகால ஜாதகத்தில் சிம்மத்தில் குரு மகாமக குருவாக வீற்றிருந்தால், தற்போதைய கோட்சாரக்குரு அந்த இடத்தை அடைவது, 'ஓராண்டுக்காலம்’ என்றாலும் வாழ்நாள் முழுவதும் வளம்பெற, வசதிகள் உண்டாகிவிடும்.

மகம் நட்சத்திரமான கேது

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

We are a specialist Criminal Firm
24 Hour
POLICE STATION EMERGENCY SERVICE
JUNG & CO
SOLICITORS
41 NORTH ROAD, SOUTHALL, MIDDX. UB1 2JL
TEL: 020 8813 8996 Fax: 020 8813 8559
EMERGENCY Nos. 07956 279 170
07956 867 370
We can also assist with:
Family - Wills & Probate - Conveyancing

நஷ்டஈடு கோர
Insurance Claims
NO WIN - NO FEE
களவு, நெருப்பு, வெள்ளம், நீர்ச்சேதம் இவைகள் மூலம் ஏற்பட்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்ய மேலதிக விவரங்களுக்கு நாடுங்கள்
Pearsons
0800 3898 102

Thana & Dev
Solicitors & Administrators of Oaths
முன்னாள் THANA & CO தற்போது Thana & Dev சட்ட நிறுவனம் ஆக புதிய முகவரியில் இயங்குகின்றது.
* Immigration/Work Permit
* House/Shops Buy/Sale/Let
Call us
020 8521 4686
07976 660 635 (24 hrs)
10 Hoe Street, Walthamstow, London E17 4PH

* * * * *

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
UK's No.1 National Tamil Newspaper
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

UDHAYAN
for your cost effective ADVT.

Genga & Co.
Solicitors
Administor of Oaths
Legal Aid Francise for Crime and Immigration
Specialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court
தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு குற்றவியல் வழக்குகள்"
"மஜிஸ்டிரேட் நீதிமன்றம், பொலிஸ்நிலையம்"
எந்தவிதமான அவசரத் தேவைக்கும் 24 மணித்தியால தொடர்பு இலக்கம்
07956 569 559
Tel: 020 8795 5020
Fax: 020 8795 5030
Genga & Co.
1st & 2nd Floor
588 High Road Wembley,
Middx. HA0 2AF

தீராத உங்களின் மன வேதனைகள் தீர்ந்திட, உங்களின் வாழ்க்கையில் என்றும் வெற்றி கண்டிட தரிசியுங்கள் அன்னையை
020 8905 7775,
020 8952 7775

WARAN & COMPANY SOLICITORS
Commissioners of Oath
Community Legal Service
Specialists in:
* Immigration & Nationality
* Asylum & Refugee matters
* Housing
* Conveyancing (Residential & Commercial)
* Liquor Licencing
Call Mr. S. K. Nageswaran LLB
Mrs. P. Nageswaran LLB (Hons.), LLB (Lon)
on
Tel: 020 8808 2397
583 High Road, Tottenham, London N17 9SY Fax: 020 8801 8818

EMPLOYMENT CLAIMS
NO WIN NO FEE
We act for Employers and Employees
on NO WIN NO FEE basis the following matters
Unfair Dismissal, Racial Discrimination, Sexual Discrimination,
Denial of Promotion, Underpayment, Denial of Holiday pay/sick pay/
maternity leave/minimum pay and related issues
Contact Mr. Das on 0790323597/07958618106
MARKANDAN & Co.
Thamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
email: mm@markandan-solicitors.co.uk

### குருப் பெயர்ச்சி தொடர்ச்சி...

சாரத்தில் குரு செல்லும் முதல் காலகட்டம், உங்கள் ராசிக்கு கேதுபகவான், 3,6,11-ல் அல்லது மீனத்தில் பிறப்பு ஜாதகத்தில் இருக்கும் நிலையில், மிக அற்புதமான பலன்களைத் தருவார். பிறப்பு ஜாதகத்தில் கேதுவும், குருவும் இணைந்து, சுபஸ்தானபலம் பெற்றிருந்தால், குருபெயர்ச்சியின் இந்த ஓராண்டில் உங்களுக்கு திடீர் தனயோகம் வரும்.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 5, 8ம் அதிபதியாக விளங்குகிற குரு கடந்த காலங்களில் 12-ம் இடத்தில் உச்சநிலையில் ஓராண்டு காலம் விரயக் குருவாக விளங்கி வந்தார். இந்தக் குரு பெயர்ச்சியில் ஜென்மக் குருவாக மாறுகிறார். பொதுவான விதிப்படி ஜென்மக்குரு சிறந்த குரு அல்ல. இதனால் அலைச்சல், திரிச்சல், மன அமைதி இல்லாமை, ஓரிடத்தில் கட்டுப்பட்டும் கிடத்தல் எனப் பலவகையிலும் தீய பலன்களை உண்டாகிறது. கடந்த ஓராண்டில் நிறைய பொருட் செலவு, விரயம், வீண்அலைச்சல் உண்டாகி வந்தது. குடும்பத்தில் சுப காரியங்களால் செலவுகள் ஏற்பட்டும்

பிறகு சுக்ரன் சாரமான பூர நட்சத்திரப் பிரவேசத்தில் குருவரும் காலத்தில், முயற்சி, சகாயம், தைரியம், வீரியம், வெற்றி வாய்ப்புகள் கைமேல் கிடைக்கும். தொழில் திடீரென புதிய மாற்றங்கள், புதிய வாய்ப்புகள் தென்படும். ராசியாதிபதியின் அதாவது சூரியனின் நட்சத்திரமான உத்திரம் 1-ம் பாதத்தில் குரு சஞ்சரிக்கும் வருடத்தின் இறுதி சில மாதங்கள், மன சந்தோஷம், எண்ணிய எண்ணங்களில் இன்னல்கள் இல்லாத இனிய திருப்பங்கள் ஏற்படக் கூடும்.

## கன்னி:

கடந்த காலங்களில் 11-ம் இடமான லாப ஸ்தானத்தில் குரு பகவான் நின்று 1 வருடம் தனது கோட்சார பலத்தைக் காட்டினார். அதனால் மூத்த சகோதர வகை மேன்மைகள் உண்டாகின. தொழில் மூலமான லாப வரவுகளுக்கு இடையூறு இல்லாமல் இருந்தது. வீடு, வாகனம், சுகம், ஆடு, மாடு, கன்றுகள் என அனைத்து வகையிலும் சிறப்புகளும், மனைவி கணவன் வகையில் பரஸ்பர சந்தோஷங்களும் உண்டாகி வந்தன. ஆனால், தற்போது சிம்மக்குரு விரயக் குருவாக மாறி, சுபச் செலவுகளுக்கு அஸ்திவாரம் தோண்டுகிறார். இது வரை நிறுத்தி வைத்திருந்த சுப காரியங்களை நடத்தி முடித்திடலாம்.

உங்களது பிறப்பு ஜாதகத்தில் கேது பகவான் 3, 6, 11ம் இடத்தில் நின்றால், குரு பெயர்ச்சியின் முதல் இரண்டு மாதங்கள் மிகுந்த மேன்மை தரும். ஆனால் கேது 8லும் 12லும் இருந்திருந்தால், குரு பெயர்ச்சியின் முதல் இரண்டு மாதங்கள் கோர்ட்டு, வழக்கு, வீண் அலைச்சல், தெண்டமாக அமையும்.

ஆனால், 60 நாட்களுக்குப்பிறகு குரு பெயர்ச்சியின் மத்தியில் பூர நட்சத்திர சாரத்தில் குரு நடை பயிலும் காலத்தில் தன மேன்மை, குடும்ப சுகம், வாக்குக்கு செல்வாக்கு உண்டாகி சமூகத்தில் அந்தஸ்து மிக்க பெரிய மனிதனாக உங்களை அடையாளம் காட்டும். மேலும், எதிர்பாராத புதிய திருப்பங்கள், திருக்கோயில் தரிசனம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றத்தைச் சந்திக்க வேண்டியுள்ளது. தொழில் செய்பவர்கள் கூட வீட்டையோ, தொழில் ஸ்தாபனத்தையோ வேற்றூருக்கு மாற்ற வேண்டிய நிலைமைகள் ஏற்படலாம்.

## துலாம்:

உங்கள்ராசிக்கு 3 எனும் தைரிய வீரிய, சகாய ஸ்தனன அதிபதியான குரு பகவான் 10-ம் இடத்தில் உச்சம் பெற்று நின்று, கடந்த ஓராண்டு காலமாக, ாகர்மக் குருாவாக செயல்பட்டு வந்தார்.

பொருளாதாரம் எவ்வளவோ வந்தபோதும், செலவுகள் கட்டுக்கடங்காமல் போனதும், வரவேண்டியது வராமலும், தரவேண்டியதைத் தராமலும் தடுமாற்றங்களை எதிர் கொண்டதுமான சூழ்நிலைகள் முடிந்தது. 11-ம் இடமான லாப ஸ்தான குரு இந்த ஓராண்டில் உங்களுக்கு மிகுந்த பொருள் வரத்தையும், தன லாபத்தையும், மகிழ்ச்சியையும் வழங்க விருக்கிறார்.

அஷ்டமச் சனி கடந்த இரண்டரை ஆண்டுகளாக ஏற்படுத்தி வந்த சிரமங்கள் மாறி, மிகச் சிறந்த முன்னேற்றங்களைச் சந்திக்க, துணைபுரிவது போலவே, குரு, ராகு, கேது பெயர்ச்சிகளும் உங்களுக்குச் சாதகமாக உள்ளன.

## விருச்சிகம்

உங்கள் ராசிக்கு 5 எனும் பூர்வபுண்ணிய ஸ்தானாதிபனும், 2 எனும் தன, குடும்ப வாக்காதிபனுமாகிய குருபகவான் கடந்த ஆண்டில் பாக்கியஸ்தானமேறி உச்சநிலையில் நின்று தனது கோட்சாரப் பலன்களை வழங்கி வந்தார். பாதகத்தோடு லாபத்தையும், பாக்கியத்தையும் கொடுத்து வந்த குரு, இப்போதைய பெயர்ச்சியில் 10-மிடமெனும் சிம்மத்திற்கு, உங்கள் ராசிக்கு ஜீவன ஸ்தானத்திற்கு வருகை தருகிறார். ா10-ல் குரு பரமனும் பிச்சை எடுத்தான்ா என்பார்கள். அவ்வளவு பொருளாதாரக் கஷ்டங்கள் உண்டாகலாம். கூடவே, அஷ்டமச் சனிவேறு ஆரம்பித்துவிட்டதே! பயணங்களில் கவனம் தேவை. பணவிஷயங்களில் கவனம் தேவை! தொழில் ஜீவன வகைகளில் புதிய பொறுப்புகள், புதிய வாய்ப்புகள் உண்டாகும். 10-ல் குரு பண நெருக்கடி பாடுபடுத்துவான் என்றாலும், அவனது பார்வை உங்களது தன ஸ்தானத்திற்கே விழுவதால், அவ்வப்போது தேவைப்படும் பணம் கைக்குத் திருப்தியாய் புழங்க வந்துவிடும் என்பதில் ஐயமில்லை. பேச்சுவார்த்தை, நாணயம், நம்பிக்கை கெடாது. குடும்பத்தில் குதூகலம், கொண்டாட்டம், உற்சாகம், விருந்து, விசேஷம், வீட்டில் அந்தணர்களை வைத்து நடத்தும் யாகவேள்வி ஆகியவைகள் நடந்து, ஆனந்தம் தரும். புதிய வீடு கட்டுதல், புதிய வாகனம் வாங்குதல் ஏற்படும். இருக்கிற வாகனங்களுக்கும், வீடுகளுக்கும் அழகு சேர்க்கும் வேலைகள் நடக்கப்போகின்றன. மேல்கல்விக்கான முயற்சிகள் வெற்றி தரும். சிலருக்கு பிரயாணத்தால் லாபங்கள் ஏற்படும்.

## தனுசு

உங்கள் ராசிநாதனும், சுகாதிபதியுமான குருபகவான் இந்த முறை அஷ்டமத்திலிருந்து, பாக்கியஸ்தானம் நோக்கி விரைகிறார். அவ்வாறு மாற்றம் பெறுவது மிகுந்த ராஜயோகம் என்றே கூறவேண்டும். உங்களது தனித்திறன், தகுதி, மேம்பாடு, அறிவு, ஆற்றல், புத்திசாலித்தனம் அனைத்தும் மேலோங்கும்.

வீடு, வாகனச் சேர்க்கைகள் நன்றாக அமையும். சுகம் அதிகப்படும். இருதயம் பலப்படும். அப்பா மூலமாக அதிர்ஷ்டம், ஆதரவு, அரவணைப்பு, சொத்து, சுகம் உண்டாகும். நீண்ட காலமாக நினைத்திருந்த எண்ணங்கள் விரைவில் கைகூடி உங்கள் விருப்பம் நிறைவேறும்.

தீர்த்த யாத்திரை, தெய்வ தரிசனம் கிடைக்கும். கோயில் கும்பாபிஷேகங்கள் நடத்தி வைத்தல், ஸ்தபதிகளுக்கு வெளிநாட்டில் கோயில் அமைக்கும் வாய்ப்புக்கிடைத்தல், பெண்களுக்கு புதிய தங்க நகை ஆபரணங்கள் சேருதல், பழைய நகைகளை புதுப்பித்து மெருகூட்டுதல் ஆகிய சிறப்பான நற்பலன்கள் நடந்து மனப்பூரிப்பை வழங்கக்கூடும். கும்பம், ரிஷபம், துலாம் வீடுகளில் ஜனை ஜாதகத்தில் கேது வீற்றிருக்கப் பெற்றவர்களுக்கு குருப்பெயர்ச்சியின் முதல் இரண்டு மாதங்கள் மகத்தான நல் வாய்ப்புகளை வழங்கும்

## மகரம்

உங்கள் ராசிக்கு 6-ம் இடமான மிதுனத்திற்கு சனி பகவான் இடமாற்றம் செய்துள்ளார். அதாவது ராசிக்கு 6-ல் நிற்கும் இரண்டரை ஆண்டுகள் மிக இனிய ஆண்டுகளாக இருக்கும். எடுத்த முயற்சிகளில் வெற்றியும், தொடுத்த காரியங்களில் லாபமும் உண்டாகும். ஆயினும் அஷ்டமக் குரு அவ்வளவாக நற்பலன்கள் தராது. குழந்தைகள் வகையில் மகிழ்ச்சியின்மை, பொன், நகை, ஆபரணங்கள் இழப்பு, நிதி, நீதித்துறையிலுள்ளவர்களுக்கு தொல்லைகள், குரு சாபம் என பல்வேறு இம்சைகளுக்கு வாய்ப்பு உள்ளதால் மகரராசி அன்பர்கள் குருபகவானுக்கு ப்ரீதி செய்து கொள்வதோடு திருத்தலங்கள் சென்று வருவது சிறப்பு.

## கும்பம்

கடந்த ஒரு வருடமாக உங்களுக்கு சில பல வகையான உபத்திரங்களை வழங்கி வந்த குருபகவான் இந்த சிம்மக் குருப்பெயர்ச்சியின் மூலம் மிகச் சிறப்பான நற்பலன்களை வாரி வழங்கத் தயாராகிவிட்டார் என்றால் அது மிகையாகாது.

பாக்கி சாக்கி, கொடுக்கல் -வாங்கல் வகைகளில் இருந்து வந்த குழப்பங்களையும், குதர்க்கங்களையும் நீக்கி, உங்களை நிம்மதிப் பெருமூச்சு விட வைக்கப்போகிறார் குரு.

நகை நப்புகளை வங்கியில் வைத்திருந்தால், மீண்டும் மீட்டு எடுத்து அணிந்துகொள்ள அவைகள் வீடு வந்து சேரும்.

உங்களை எதிர்த்தவர்கள், பகை தொடுத்தவர்கள் ஓர ஒதுங்கி நின்று கொள்வார்கள்.

கடந்த ஒருவருடமாக இருந்து வந்த வயிற்றுவலி, கால்வலி, தோல்அரிப்பு நோய்கள் தூர ஒடிப்போகும்.

நீண்டகாலமாக நடந்து வந்த வழக்கு இந்தமுறை உங்கள் பக்கம் சாதகமாகத் தீர்ப்பாகப்போகிறது.

உங்கள் ராசிக்கு ாதனமா தரும் குரு சப்தம ஸ்தானம் ஏறி ராசியை நோக்க, எதிர்பாராத பணவரவு உங்களை சமூகத்தில் அந்தஸ்து மிக்க மனிதனாக அடையாளம் காட்டும். உங்கள் குடும்ப நிலையில் முன்னேற்றமும், உங்கள் பேச்சு வார்த்தைகளில் பெருமை தரும் பாராட்டுகளும் ஏற்படக்கூடும்.

லாபஸ்தானதிபதியாகிய குரு பகவான் 7-ம் இடம் மாறுதல் அடைவதால், மூத்த சகோதர வழி மேன்மை உண்டாகும். லாபமேன்மைகள் கைகூடும்.

## மீனம்

உங்கள் ராசிநாதன் 6-ம் வீடு செல்கிறார். அதனால் கீர்த்தி, மூர்த்தி, மூளை, அறிவு, ஆக்கத்திறன் பாதிப்பும், உங்கள் மனநிலையில் தெளிவில்லாமையும் ஏற்படக்கூடும்.

உங்கள் ராசிக்கு 10-ம் வீட்டோனாகிய ஜீவனாதிபதி 6-ல் மறைவதால் செய்தொழிலால் பாதிப்பும், இடமாற்றமும் பொருள் விரயமும் ஏற்பட்டு, குழப்பங்களை உண்டாக்கும்.

உடன் அர்த்தாஷ்டமச்சனி நடைமுறையில் உள்ளதால் உடல்நலத்தை பேணி பாதுகாக்கவும், வண்டி, வாகன நஷ்டங்கள், பெற்ற தாய் வகையில் பொருட் செலவுகள், மாடு, ஆடு, கால்நடைகளால் நஷ்டங்கள் உண்டாகும். பயிர் விளைச்சல் பாதிப்பைத் தரும்.

இந்த ஆண்டில் ஏற்படும் ராகு கேதுப் பெயர்ச்சியும் 2-ல், 8-ல் அமைவதால், திருமணத் தடை, இல்லற வாழ்வில் குழப்பங்கள், விஷக் காய்ச்சல் ஆகிய இடையூறுகளுக்கு இடமுண்டு. மேற்படி குருவின் ஸ்தானபலம் பாதிப்பாக இருந்தபோதும், பார்வை பலம் நன்மை தரும் வகையில் உள்ளது. 10-ம் வீட்டையே குரு பார்வை செய்வதால் தொழில்துறையில் உள்ளவர்களுக்கு மாற்றத்தோடு கூடிய முன்னேற்றமும், உத்தியோகத்துறையினருக்கு இடமாற்றம், புரமோஷன்களும், தனஸ்தானத்தையும், விரயஸ்தானத்தையும் பார்வை செய்யும் குரு பகவான் வரவைத் தருவதோடு சுபச் செலவுகளையும் உடன் தருவார். குடும்பத்தில் சுப காரியங்களால் பொருள் விரயம், திட்டமிட்டதற்கு மேல் பொருட் செலவு ஏற்படும்.

## NOTICE TO ADVERTISERS



Rajasingham Jeyadevan

The person shown in the photograph is a nuisance caller. As UDHAYAN has already published about his fraudualent activities, we understand that he has indulged himself in making anonymous phone calls/leaflets or sometimes in fake names to our advertisers and acting in a way trying to damage the reputation of our Newspaper.

Dear Advertisers, So, kindly ignore his approach in any form.

Thank you for bearing the nuisance with us and informing us.

A good Businessmen knew the benefit of Publicity. Inexperienced people's opinion is not the true reflection of the dimension of reach in the Community. As Community is a massive density of people widely scattered at various geographical locations. UDHAYAN is the only hardcopy which has the massive effective reach. Many Advertisers are coming back, realising the fall in Business. Udhayan welcomes you with open arms. Tap the Tamil Community through UDHAYAN. The only effective media.

# விசாவிற்கு விண்ணப்பிக்கும் இலங்கையர்களின் விரல்ரேகை அடையாளப் பதிவு !!!

# இலங்கையர்களைக் குற்றவாளிகளாக்குகிறது அரசு - தமிழ் கவுன்சிலர்கள்

இலங்கையில் விசாவிற்கு விண்ணப்பிக்கும் அனைவரதும் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்ய உள்ளதாக பிரித்தானிய அரசு யூன் 8ம் திகதி அறிவித்து உள்ளது. பிரபுக்கள் சபையின் விவாதத்தில் இலங்கை அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கியதால் இலங்கை பரீட்சார்த்தமாகத் தெரிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் உள்துறை அலுவலக அமைச்சர் பெவர்லி கியூச் இலங்கையர்கள் பலர் தஞ்ச விண்ணப்பத்தில் மோசடி (fradulent) செய்வதாகவும் பலருடைய தஞ்ச விண்ணப்பங்கள் அடிப்படையில்லாமல் (unfounded) நிராகரிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை பரீட்சார்த்தமாகத் தெரிவு செய்யப்பட்டதற்கான காரணங்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டு உள்ளதாகக் குறிப்பிட்ட தமிழர் தகவல் நடுவத்தின் சட்டத்தரணி கனநாதன் அமைச்சர் கியூச் fradulent ற்கும் unfounded ற்கும் வித்தியாசம் தெரியாமல் விளக்கமளித்த உள்ளதாகக் குற்றம்சாட்டினார். தஞ்ச விண்ணபதாரி இலங்கையில் இருந்து (அப்போது இருந்த நிலையில்) பாதுகாப்புத் தேடி தஞ்ம் கேட்டு எந்த வழியாலும் வந்திருக்கலாம். ஆனால் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தால் நிலைமைகள் மாறி உள்ளது என்று கூறி தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது. அதற்காக தஞ்ச விண்ணப்பதாரி மோசடி செய்ததாகக் கூற முடியாது என கனநாதன் குறிப்பிட்டார்.

பிரித்தானிய அரசின் இந்த முடிவு இலங்கையர்களைக் குற்றவாளிகளாக்குவதாக கவுன்சிலர்கள் தயா இடைக்காடர், போல் சத்தியநேசன் ஆகியோர் தெரிவிக்கின்றனர். பிரித்தானிய அரசின் இந்தப் போக்கை பிரித்தானிய அகதிகள் அமைப்பின் இலங்கைத் திட்ட இணைப்பாளர் மாயன் விஜயையும் கண்டித்து உள்ளார். 1951ம் ஆண்டு அகதிகள் ஒப்பந்தத்திற்கு மதிப்பளித்து அதனை பின்பற்ற வேண்டும் என்று மாயன் விஜயை பிரித்தானிய அரசைக் கேட்டுள்ளார்.



கவுன்சிலர் தயா

## ஏன் இலங்கையர்கள் மட்டும்?

அமெரிக்கர்களும், அவுஸ்திரேலியர்களும், நியூஸ்லாந்து நாட்டவர்களும் தான் கூடுதலாக குடிவரவு விதிகளை மீறி முழுநேரம் வேலை செய்கிறார்கள். அங்கெல்லாம் விரல் அடையாளங்கள் பதிவு செய்யப்படாமல் இலங்கையில் மட்டும் அதனை ஏன் அறிமுகப்படுத்த வேண்டும் என்று கேள்வி எழுப்புகிறார் கரோ, றொக்சீத் கவுன்சிலர் தயா இடைக்காடர்.



கவுன்சிலர் போல்

## தஞ்சக் கொள்கைக்கு அவமதிப்பு:

பிரித்தானிய உள்துறை அமைச்சின் விரல் அடையாளத்தை பதிவு செய்யும் முறையை வன்மையாகக் கண்டித்தார் நியூகாம், வோல் என்ட் கவுன்சிலர் போல் சத்தியநேசன். பிரித்தானிய தஞ்சக் கொள்கைக்கும் சர்வதேச பாதுகாப்பளிக்கும் கொள்கைக்கும் உள்துறை அமைச்சு கொடுத்த அவமதிப்பு இது என கவுன்சிலர் போல் அரசைக் குற்றம்சாட்டினார். தஞ்சம் கேட்பவர்களைக் குற்றவாளிகளாக்க முனையும் இம்முறை சிவில் உரிமைகளுக்கும் எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கையர்களை வரவேற்கும் தார்மீகக் கடமைப்பாடு பிரித்தானிய அரசிற்கு உண்டு என்று குறிப்பிட்ட கவுன்சிலர் போல் அதிலிருந்து பிரித்தானிய அரசு தவறியதுடன் அவர்கள் வருவதைத் தடுக்கவும் முயற்சி செய்வதாகத் தெரிவித்தார்.

## இதுவா தீர்வு:

பிரித்தானியாவில் தஞ்ச விண்ணப்பங்கள் அதிகரிப்பதாகவும் நாட்டிற்கு அதனால் ஆபத்து என்றும் வலதுவாரி அணி தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகிறது. தொழிற் கட்சி அரசு அதற்கு பதிலளிக்கும் வகையில் சில எழுந்தமானமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகிறது. பிரித்தானிய அரசு குடிவரவுப் பிரச்சினைக்கு முழுமையான ஒரு தீர்வை முன் வைக்காமல் அரைகுறைத் தீர்வை வைத்து பிரித்தானிய மக்களின் வரிப்பணத்தை விரயமாக்குவதாக கவுன்சிலர் இடைக்காடர் சுட்டிக்காட்டினார். இதே கருத்தை வெளியிட்ட கவுன்சிலர் போல் சரியான ஆலோசனைகளைப் பெறாமல் உள்துறை அமைச்சு தவறான நடவடிக்கைகளில் இறங்குவதாகத் தெரிவித்தார்.

## நுனிப் புல் மேய்வது:

இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரக அதிகாரிகள் இலஞ்சம் வாங்கி குடிசரவு விண்ணப்பங்களில் மோசடியில் ஈடுபடுவதைச் சுட்டிக்காட்டிய தமிழ் அமைப்பு ஒன்றின் முக்கிய பிரதிநிதி தங்களின் செயற்பாட்டில் உள்ள தவறுகளை சீர்படுத்தாமல் இப்படியான முறைகளை கொண்டுவருவது நுனிப் புல் மேய்வது போல் உள்ளது என்று குறிப்பிட்டார்.

## இது குற்றமல்ல:


தகுந்த ஆவணங்கள் இல்லாமல் அரசியல் தஞ்சம் கோருபவர்கள் மோசடிக்காரர்கள் என்று எண்ணுவது தவறு என்று குறிப்பிட்ட இணைப்பாளர் மாயன் விஜயை தஞ்சம் கோரும் பலர் தங்களிடம் உள்ள ஆவணங்களை பயத்தினாலேயே அழிப்பதாகவும் மற்றையவர்களிடம் இருந்து ஆவணங்கள் எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

## அமைச்சரின் விளக்கமும் விளக்கமின்மையும்

இலங்கையில் விரல் அடையாளம் பதிவு செய்யும் முறையை வெளியிட்ட உள்துறை அலுவலக அமைச்சர் பெவர்லி கியூச் உயிரியல் (Biometric) முறையே ஒருவரது அடையாளத்தை சரியாக உறுதிப்படுத்த உகந்தது என்று குறிப்பிட்டதுடன் தஞ்ச விண்ணபங்களில் மோசடி செய்பவர்களைத் தடுக்க இது பயன்படுத்தப்பட உள்ளது என்று குறிப்பிட்டார். இலங்கையில் விசா பெற்று வருபவர்கள் பிரித்தானியாவிற்கு வந்து தங்கள் ஆவணங்களை அழித்துவிட்டு அரசியல் தஞ்சம் கேட்டால் அவர்களை அடையாளம் காண இது உதவும் என்றும் மேலும் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களுக்கு புதிய கடவுப் பத்திரத்தைப் பெற்று அவர்களைத் திருப்பி அனுப்ப உதவும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆனால் அமைச்சரின் இந்த விளக்கம் அரைவேக்காடாக பல சந்தேகங்களை எழுப்பி உள்ளது. தற்போது 27,000 இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு கடவுச்சீட்டு எடுக்க இத்திட்டம் எப்படி உதவும்?
பல நூற்றுக் கணக்காண இந்தியர்கள் இலங்கையர் என்ற அடையாளத்தில் தஞ்சம் பெற்றுள்ளனர். இன்னமும் தஞ்சம் பெற்று வருகின்றனர். இவர்களது அடையாளத்தை எப்படி உறுதி செய்ய முடியும்?
இலங்கையில் இருந்து பிரித்தானியாவிற்கு விசா பெற்று வந்து தஞ்சம் கேட்டவர்கள் மிகச் சிலரே. அப்படி இருக்கையில் இத்திட்டம் எப்படி உதவும்? இப்படி அரசின் நோக்கம் பற்றிய சந்தேகக் கேள்விகளும் எழுப்பப்பட்டு உள்ளது.

மேலும் குடிவரவு சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களிலும் இந்த உயிரியல் முறையிலான அடையாளங்கள் பயன்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் கியூச் தெரிவித்தார். 2005ல் கடவுச்சீட்டுகளிலும் விரல் அடையாளங்கள், கண்ணின் ஐரிஸ் பகுதியின் பதிவுகள் சேர்க்கப்பட உள்ளது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு உள்ளது.



சட்டத்தரணி கனநாதன்

சிலர் தஞ்சச் செயற்பாடுகளை உதாசீனம் செய்கிறார்கள் என்பதை கருத்துக்களை முன் வைத்த தமிழ்ப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் அப்பிரச்சினையை இலங்கையில் கைவிரல் அடையாளத்தை பதிவு செய்து தீர்ப்பது முறையல்ல என்பதில் அவர்கள் ஆணித்தரமாக உள்ளனர். அதற்காகத் தான் பிரித்தானியாவில் தஞ்சச் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு வருவதை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இது பற்றிக் குறிப்பிட்டுள்ள இணைப்பாளர் மாயன் விஜயை பிரித்தானியாவில் சட்டப்படி வந்து தஞ்சம் கேட்க எந்த வழியும் இல்லை. அப்படி இருக்கையில் மேலும் தடைகளைப் போடுவது பிரித்தானியாவின் பாதுகாப்பு தேவைப்படுபவர்கள் அதனை அணுக முடியாமல் தடுப்பதற்கே வழிகோலும் என்று குறிப்பிட்டார். அடைக்கலம் தேடுபவர்களுக்கு பிரித்தானியாவின் கதவுகள் தொடர்ந்தும் திறந்து இருக்க வேண்டும் என விஜயை பிரித்தானிய அரசைக் கேட்டு உள்ளார்.

இலங்கையில் வைத்தே தஞ்ச விண்ணப்பங்களைப் பெற்று பரசீலிக்கவும் அது மறுக்கப்பட்டால் மேன்முறையீடு செய்வதற்குமான ஒரு முறையை அறிமுகப்படுத்துவது பலனளிக்கும் எனத் தெரிவித்தார் சர்வதேச அகதிகள் அமைப்பின் தலைவர், சட்டத்தரணி சி குலேந்திரன்.

விரல் அடையாளப் பதிவு இலங்கையர்களை மோசடியானவர்களாகக் காட்டி உள்ளது என்று குறிப்பிட்ட சட்டத்தரணி கனநாதன் உள்துறை அமைச்சிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி சட்ட ஆலோசணை பெற்று வருவதாகக் குறிப்பிட்டார். கடந்த ஆண்டு தமிழர்களை இனப்பாரபட்சமாக நடத்த உள்துறை அமைச்சு எடுத்த முடிவுக்கு எதிராக தமிழர் தகவல் நடுவம் தொடுத்த வழக்கு தமிழர்களுக்கு சாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

## தகமைபெற்ற தமிழ்ப் பெண்



செல்வி தமிழினி குலேந்திரன்

குடிவரவு ஆலோசணைகளை வழங்குவதற்கு தகுதியானவராக உள்துறை அமைச்சின் குடிவரவுப் பிரிவு தமிழினி குலேந்திரணை நியமித்து உள்ளது. இப்பதவிக்கு நியமிக்கப்பட்டு உள்ள இளம் அலுவலர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. பத்தொன்பது வயதான செல்வி தமிழினி யூன் 25 ம் திகதி மேற்படி பொறுப்புக்கு நியமிக்கப்பட்டு உள்ளார். தமிழ்ப் பெண்கள் புலம்பெயர்ந்த மண்ணில் பல சாதனைகளையும் நிலைநாட்டி வருகின்றனர். அந்த வகையில் செல்வி தமிழினியும் தனது தடத்தைப் பதித்து உள்ளார்.

## ஆசியர்களில் நீரிழிவு அதிகம்

ஆசியர்களைக் கொல்லும் நோய்களில் நீரிழிவு முக்கியமானது என Diabetes UK என்ற மருத்துவ அமைப்பு தெரிவிக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் எப்பகுதியில் வாழ்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அவர்களுக்கு சிகிச்சை கிடைப்பதாகவும் அவ்வமைப்புத் தெரிவிக்கிறது. வெள்ளையின பெரும்பான்மைச் சமூகத்தைக் காட்டிலும் ஆசியர்களில் நீரிழிவு நோய் ஏற்படும் வீதம் ஆறு மடங்கு அதிகமாக இருப்பதாக அவ்வமைப்பு மதிப்பிட்டு உள்ளது. இதனை இலகுவான பரிசோதனை மூலம் கண்டுபிடித்து விட முடியும் எனத் தெரிவிக்கும் டொக்டர் பாண்டே சரியான ஆகார முறை பின்பற்றப்பட்டு வழமையான பரிசோதனைகளை மேற்கொண்டு சிகிச்சை பெற்றால் அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்றார்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# HARTEX

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

· COMBAT · PULLOVERS · MAP CASES · THERMAL UNDERWEAR
· RAINWEAR · BODY WARMERS · SHORTS · COMPRESSORS BAGS
· CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS
· HIKING BOOTS · HAMMOCKS · CUTLERY SETS
· GLOVES · HEADWEAR · PLATES · WEBBING · HIKING BOOTS



Competitive prices

55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS





# MULTILINES LIMITED

Designer Bedrooms / Kitchens & Shopfitters

- DESIGNER BEDROOMS
- KITCHENS
- LOUNGE UNITS
- HOME-STUDY
- TRADITIONAL INDIAN SEATING
- MANDIRS
- BEDS




DELIVERY OF PRODUCTS ONLY WITHIN M25
Unit 1, 255 Water Road, Abbeydale Industrial Estate, Wembley, Middx. HA0 1JW
Tel: 020 8997 7788 Fax: 020 8997 9988
E mail: info@multilines.co.uk, Web: www.multilines.co.uk

# NET TRY தமிழ் சூப்பர்மார்க்கெட்

27 Watling Avenue, Edgware, Middx. HA8 0JD
புதிய நிர்வாகத்தின் கீழ் 020 8952 5959

இலங்கையிலிருந்து பெறப்படும் உடனடி மரக்கறி வகைகள், லீலா, நிரு, Fudco உடன் சமுத்திரா கடலுணவுப் பொருட்கள், மதுபான வகைகள், கோயிலுக்கு உரிய பொருட்கள், இதர பல சரக்குப் பொருட்கள், தாயகப் பொருட்கள் யாவும் இங்கு கிடைக்கும்.

தமிழ், ஹிந்தி புதிய பழைய சினிமா வீடியோ கஸட்டுகள், வீ.சீ.டி.கள், டீ.வீ.டி.கள் வாடகைக்கும், ஓடியோ கஸட்டுகள், சீ.டீ.க்கள் விற்பனைக்கும் இங்கு இருக்கின்றன.

The UDHAYAN
உதயன்
ADVERTISE
FOR
BEST
RESULTS
020 8952 5677

# TRAVLIN STYLE

Low Cost flights / Hotel / Insurance to all Destinations

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA | £349 | CANADA | £245 | COLOMBO | £365 |
| DUBAI | £250 | NAIROBI | £325 | SOUTH AFRICA | £335 |
| NEWYORK | £145 | ORLANDO | £200 | PARIS | £49 |
| | | LISBON | £120 | | |

All Prices are subject to availability and Airport Taxes. Special Discount to Senior Citizens and Groups to India.
Travelin Style Ltd. 46 Church Road, Stanmore, Middx.HA4 4AH
Tel: 020 8954 0077
Retail agents for Atol holders

நாளொன்றிற்கு
£25 வீதம்
மாதம் 6 நாட்கள்
வரை நிரந்தரமாக
வேலை
வேண்டுமா?
020 8952 5677

# Euro Glazing

Windows, Doors, Porches, Conservatories

உயர்ந்த தரம், நிறைந்த சேவை மற்றும் மிகுந்த சேமிப்புக்கு நாடுங்கள்
020 8574 9494



We give guarantee for our quality products ranges we supply.
Our professional staffs are highly skilled to fit Windows, Doors, Porches, Conservatories...
Just one call away to make your home complete
Unit 7, Barrett Industrial Park, Park Avenue, Southall, Middlesex UB1 3AF
Tel: 020 8574 9494 Fax: 020 8574 8989

# NESAN Cash & Carry

NEWLY OPENED

MANY OPENING OFFERS

* இலங்கை மரக்கறி வகைகள், நிரு, யாழினி, லீலா, TRS தயாரிப்புகள், சமுத்திரா, யாழினி கடல் உணவுகள் யாவும் குறைந்த விலையிலும்
* திருமண ஆடை அலங்காரங்கள் வாடகைக்கும்
* மேலும் பிரதி வாரமும் அதிவிசேட விலைக்கழிவில் பொருட்களும் உண்டு

SPECIAL OFFERS EACH WEEK

* ஓடியோ கேஸட், C.Dக்கள் விற்பனைக்கும் உண்டு

வாருங்கள்

Tel: 020 8574 4018
217 The Broadway Southall

# AIR TRAVEL Corporation

0870 748 7474
www.airtravelcorp.co.uk

DUBAI SPECIAL OFFERS

3 NIGHTS OFFERS
3★ Golden Sands Apts. £299
4★ Oasis Beach Resort £354
5★ Taj Palace £354
5★ Jumeirah Beach £439
www.traveldubai.co.uk

7 NIGHTS OFFERS
4★ Metropolitan City £364
Beach Access
5★ Jebel Ali £439
Inc Flights, Transfers & Breakfast (not inc Golden Sands). Limited availability. Conditions apply. Departures upto 24 AUG.

WORLDWIDE FLIGHTS

| | | | |
|---|---|---|---|
| Madras | £419 | Columbo | £364 |
| New York | £234 | Mumbai | £319 |
| Orlando | £419 | Nairobi | £399 |
| Los Angeles | £379 | Singapore | £369 |

CALL FOR OTHER DESINATIONS
Plus taxes. Early July Departures. Limited availability. Conditions apply.

Air Travel Corporation, Hammond House, 2 Bonnersfield Lane, Harrow, Middlesex HA1 2JR. sales@airtravelcorp.co.uk www.airtravelcorp.co.uk Agents for ATOL protected holders. TTA: R454X